# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு மாசிமாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 12 | 8-ம் இலக்கம்


# தமிழக ஆயர்கள் சென்னையில்

## கூடிப் பொதுத்தீர்மானங்கள் செய்தனர்

தமிழகக் கத்தோலிக்க மேற்றிராணிமார்கள் சென்னையில் ஜனவரி 24—26 தேதிகளில் ஒன்றுகூடிப் பேசினர். சென்னை-மயிலை, வேலூர், கோயம்புத்தூர்,- புதுவை — கடலூர், சேலம், கும்பகோணம், தஞ்சை,— மதுரை, திருச்சி, தூத்துக்குடி,—கோட்டார், உதகை ஆக இந்த 12 தமிழ் மேற்றிராசனங்களின் அதிபர்களும், சென்னை-மயிலை உதவி மேற்றிராணியாரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### ஆராய்ந்த பிரச்சினைகள்

● புதிய ஏற்பாட்டின் புதுத் தமிழாக்கம் ஒன்றை விரைவில் வெளியிடுவதற்காக நிறுவப்பட்டுள்ள நிபுணர் குழு. அதைப்பற்றிக் குழுவின் தலைவரான புதுவை-கடலூர் அதிமேற்றிராணியார் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார்.

● அரசினர் வெளியிடும் பாட புத்தகங்களைப் பரிசீலனைசெய்து, அவற்றில் காணும் ஆட்சேபனைக்குரிய பாடங்களை அல்லது பகுதிகளைப் பற்றித் தகுந்த சமயத்தில் கண்டனக்குரல் எழுப்ப ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் கத்தோலிக்க ஆசிரியர் கழகம் அமைத்தல்

● வரும் பொதுத்தேர்தலில் கம்யூனிஸ்தர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆகிய இவ்விரு தரப்பினர் மட்டில் கத்தோலிக்கர் நடந்துகொள்ளவேண்டிய முறை: இவ்விரு கட்சியினர்க்கும் கத்தோலிக்கர் வோட் அளிக்கக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

● பங்குக் குருக்களின் வேத போதகப் பணியில் துணைபுரிய முழுநேர வேலைசெய்யும் வேதியர்களை (உபதேசிமார்களை) உருவாக்க, திண்டிவனத்திலும், பூந்தமல்லியிலும், கோயாம்புத்தூரிலும் பயிற்சி நிலையங்கள் நிறுவுதல்.

● இல்லறத்தாரின் அப்போஸ்தலம், கத்தோலிக்க சேவை, ஞானோபதேச இயக்கம், ஆராதனை முறை இயக்கம். மதுரை அதிமேற்றிராணியார் இவற்றை விளக்கினர். சென்னை மாநிலத்திலுள்ள கத்தோலிக்க பள்ளிகளில் பயன்படுத்த ஞானோபதேசத் திட்டம் ஒன்றை வகுக்குமாறு திண்டிவனம் சங். E. பெச்கெர் சுவாமிகள் பொறுப்பளிக்கப் பெற்றுள்ளார்.

● கத்தோலிக்க இந்திய சங்கத்தின் ஒருகிளையாக, சென்னை மாநிலத்திற்கென்று பிரதேச அடிப்படையில் ஒருசங்கம் அமைத்தல்.

● தமிழில் வெளிவரும் கத்தோலிக்க பத்திரிகைகளை ஒன்றுபடுத்தல். ஒரே ஒரு வாரப்பத்திரிகை: புதுவை 'சர்வ வியாபி' — தூத்துக்குடிக் கத்தோலிக்க இலக்கியக் கழகத்தின் பொறுப்பில் ஒரு சிறந்த மாதவெளியீடு. (தினத்தாள் என்பது நமக்குச் சாத்தியமானதல்ல என்று கைவிடப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.)

● ஒன்றுக்கு மேற்பட்ட மேற்றிராசனங்கள் சம்பந்தப்பட்ட திருமணங்களுக்காகச் செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளிலும், முதல் காலைத்தொடும் 2-ம் கால் இரத்தஉறவில் (அக்காள் மகள்+தம்பி) திருமணம் நடைபெற அனுமதி அளியாதிருப்பதிலும் யாவரும் ஒரேவிதமான கொள்கையைக் கடைப்பிடித்தல்.

● ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் கோடையில் ஒன்று அல்லது இரண்டு வாரங்கட்கு, படித்த படிப்பைத் திரும்பிப் பார்க்கக் குருக்களுக்கு வகுப்புகள் நடத்துதல்.

# மதச்சுதந்திரம் இல்லையேல் சுதந்திரத்திற்குச் சிறப்பில்லை

— அமெரிக்க ஜனாதிபர் கென்னடி —

"ஏறக்குறைய இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு அமெரிக்க நாட்டை நிறுவிய முன்னோர்களைப் போலவே அமெரிக்காவில் இன்று வாழும் மக்களும் மதச் சுதந்திரம், மதநம்பிக்கை ஆகிய கொள்கைகளுக்குத் தம்மைப் பணித்துக்கொண்டுள்ளனர்; கடவுளிடமும், ஆன்மீக வலிமையிலும் உள்ள நம்பிக்கையே கம்யூனிஸ உலகத்தினின்றும் அமெரிக்காவுக்குச் சிறப்பு அளிக்கிறது."

என்று ஜனாதிபதி கென்னடி 9-2-61 வியாழனன்று அனைத்துலகக் கிறீஸ்தவத் தலைவர்கள் மகாநாடு ஏற்பாடு செய்திருந்த ஒரு விருந்தில் குறிப்பிட்டார்.

'வலிமை மிக்க மத நம்பிக்கை படைத்த ஆண்களும், பெண்களும் அமெரிக்க நாட்டை நிறுவினர்; ஒரு சுதந்திர முறையின் கீழ்த்தான் இந்த நம்பிக்கை வளர்ந்தோங்க முடியும் என்பதை அவர்கள் உணர்ந்தனர். மதநம்பிக்கை இல்லாவிடில் இந்நாட்டில் சுதந்திரத்துக்குச் சிறப்புக் கிடையாது. நமது வற்றாத வளமான ஆன்மீகப் பலத்தையும் நாம் துணைக்கொள்வது அவசியம். மனிதர்களின் துணைமட்டும் போதாது; இதுபோன்ற காலங்களில் நாம் இறுதியான உறுதியும் வரம்பில்லாத அறிவும் பெறவேண்டுமானால், நமக்கும் மேற்பட்ட சக்தியைத் துணைக்கொள்ள வேண்டும் என்பதை நாம் உணரவேண்டும்.

[ தொடர்ச்சி 5-ம் பக்கம் ]

# கியுபாப் பள்ளிகளில்

## மார்க்சீய நூற்குவியல்

கியுபாவின் பிரதமர் பிடெல் கஸ்திரோவின் ஏவலாட்கள் திருச்சபைக்கு விரோதமாக உக்கிரமானதோர் இயக்கத்தை நடாத்தி, இத்தாபனம் ஒன்றே கியுபா மார்க்சீய மயமாவதற்குத் தடையென்றுணர்ந்து, கலாபனையைத் தொடங்கியிருக்கின்றனர்.

அரசாங்க கலாசாலைகளில் சமயபாடம் படிப்பிப்பதை நிறுத்தியும், கத்தோலிக்க கல்விக்கூடங்களில் மார்க்சீயப் பிரசார நூல்களைப் உபயோகிக்கும்படி கட்டாயப்படுத்தியும் கல்விஅமைச்சு கட்டளை விடுத்துள்ளது.

இவ்வரசின் காணி, கிராமப் புனருத்தாரணக் கொள்கை கிராமப்புறங்களிலுள்ள குருமார் தோட்ட முதலாளிமாரிடமிருந்து இதுகாறும் பெற்றுவந்த உதவிகளைத் தடைசெய்திருக்கிறது.

திருச்சபையை மறுதலித்துவிட்ட குருமாரின் உதவியைக் கொண்டு கியுபாவில் ஒரு பிரிவினைத் "தேசிய திருச்சபை"யை அமைக்க முயற்சியெடுக்கிறது.

அரசாங்க ஆதிக்கத்திலுள்ள தினத்தாள்களும், பொதுவுடமைப்பேச்சாளரும் குருமாரைக் கண்டனஞ்செய்கின்றனர். கஸ்திரோவின் ஏவலாட்கள் கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகளுக்கும் ரெலிவிஷன் காட்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர். திருச்சபை நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்வதைத் தடுத்ததை

[ தொடர்ச்சி 5-ம் பக்கம் ]

## கத்தோலிக்க பிரசுரவாரம்

இவ்வருடம் பங்குனிமாதம் 5-ந்திகதியிலிருந்து 12-ந்திகதிவரையும் கத்தோலிக்க பிரசுரவாரமாக இலங்கை முழுவதிலும் அனுசரிக்கப்படும். இந்நாட்களில் ஒவ்வொரு கத்தோலிக்கனும் செபத்தினாலும், கத்தோலிக்க பிரசுரங்களுக்கு ஆதரவு அளிப்பதினாலும் கத்தோலிக்க பிரசுரங்களின் விருத்திக்காக உழைக்கவேண்டும். ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பத்திலும் ஒரு கத்தோலிக்கபத்திரிகை என்கிலும் இடம்பெறும்படி ஆர்வத்துடன் தொண்டாற்றுவோமாக.

கத்தோலிக்க இலக்கிய அபிவிருத்திக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றச் சர்வாதிகாரக் குழியில்

## நம் நாடு குடைசாய்ந்து வீழ்கிறதா?

தேர்தற்களத்திலே 1956-ம் ஆண்டு வாகைமாலைசூடிய காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகா வானொலி மூலம் நாட்டுமக்களுக்கோர் நற்செய்தியை விடுத்தார். "நமது ஆட்சியின் மூலம் நாட்டின் பல்வேறுசமூகத்தவர்களுக்கும் நீதியைவழங்குவோம். ஜனநாயகஆட்சியின் இலட்சணங்களையும், உன்னத சித்தாந்தங்களையும் உணர்ந்த நாம் மேற்படி அம்சங்கள் நமதுஆட்சியில்மிளிர நிர்வாகத்தைநடத்துவோம்" என்று வாக்குறுதியளித்தார். ஜனநாயகத்தின் வெளிஅடையாளங்களை அழுங்குப் பிடியாகப்பிடித்து அதன் உண்மைத் தத்துவங்களை அலட்சியம் செய்தல், பாராளுமன்றத்தைப் பெரும்பான்மைப் பலம்கொண்ட ஓர்சர்வாதிகாரப் பீடமாக்குமென்பதை அவர் நன்குணர்ந்தார். பாராளுமன்ற ஜனநாயகத்தைப்பற்றிப் பிரதமர் பண்டாரநாயகா கொண்ட அபிப்பிராயம் ஜனநாயகத்தின் வெளி அடையாளங்களாகிய பெரும்பான்மையினரின் ஆட்சி, பொதுத்தேர்தல்கள், அரசியல் எதிர்க்கட்சிகள், சட்டம்உருவாக்குதல் என்பனபற்றியது மாத்திரமன்று. மேற்படி அம்சங்கள்மாத்திரம் உண்மை ஜனநாயகத்தை உருவாக்குவதில்லை. 1936-ம் ஆண்டிலே ஸ்ராலின் ருஷியாவில ஏற்படுத்திய அரசாங்கத்திலும் மேற்படி அம்சங்கள் விளங்கின. பொதுவுடைமைச் சித்தாந்தங்களைப் போதிப்பவர்கள் ஸ்ராலினின் ஆட்சியின்கீழ் ருஷியா ஜனநாயகநாடாக விளங்கியது என்பதை நிரூபிக்க மேற்படி அம்சங்களை ஆதாரமாகக் கொள்ளுகின்றார்கள்.

ஜனநாயகத்தின் உண்மைத்தத்துவங்களை அலட்சியம்செய்து வெளிஅடையாளங்களை மாத்திரம் கடைப்பிடித்தல் ஓர்நாட்டின் அரசாங்கத்தை நீதிநெறியில்நின்று வழுவச்செய்யும்; ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும். இதற்கு நேர்மாறாக உண்மைத்தத்துவங்களை உணர்ந்து கடைப்பிடிப்பது நீதியும், சுதந்திரமும் நிலவுவதற்கு வழிவகுக்கும். ஜனநாயகத்தின் சிறந்த பண்புகளாகிய பேச்சுரிமை, பத்திரிகைச் சுதந்திரம், சர்க்காரின் குறைகளைச் சுட்டிக்காட்டிக் கண்டித்தல், மத சுதந்திரம், சொத்துரிமைச் சுதந்திரம், தனிநபரின் சுதந்திரம்என்பன ஜனநாயக ஆட்சியில் பிரதிபலிக்கவேண்டும். ஜனநாயக தத்துவங்களின்றி வெளியடையாளங்களைக் கடைப்பிடித்தல் ஜனநாயகத்தைக் கேலிசெய்வதாக அமையும்.

சட்டத்திற்கும், நீதிக்குமிடையில் மிகப்பெரியவித்தியாசமுண்டு. சர்க்கார் நாட்டின் நல்வாழ்விற்காகக் கடைப்பிடிக்கும் நீதிநெறிச் சட்டங்களுக்கும், ஆட்சிபீடம் தனது அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய அமைக்கும் சட்டங்களுக்குமிடையில் பாரதூரவித்தியாசமுண்டு. கட்சிப்பலத்தவரின கைஎண்ணிக்கைக்குத்தக உருவாக்கப்படும் சட்டத்திற்கும்; சமுதாயத்தின் கலனைக் கருதி உருவாக்கப்படும் சட்டத்திற்குமிடையில் பெரியவித்தியாசமுண்டு. பாராளுமன்றம் உருவாக்கும் எல்லாச்சட்டங்களும் நீதியானவைகளன்று. சன்மார்க்கத்தைச் சார்ந்தசட்டங்களே மக்களைக்கட்டுப்படுத்த வல்லன. குறிப்பிடப்பட்ட காலத்தில் அரசாங்கத்தில் இருப்போர் தங்கள் ஆவலைப் பூர்த்திசெய்யஉருவாக்கும் நீதியற்றசட்டங்களை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. பசிபிக் தீவிலுள்ள ஓர்பாராளுமன்றம் கைலஞ்சம்வாங்குவது நீதியும் நேர்மையும் வாய்ந்ததென்று சட்டம் விதித்தால் இச்சட்டமும், செயலும் நீதிக்கு நேர்விரோதமானவையாகும். காடைத்தனம் மக்களின் பிறப்புரிமை; அதைக் கடைப்பிடிப்பதில் தவறில்லையென்று தென்னமெரிக்க பாராளுமன்றம் சட்டம்வகித்தால் இச்செயல் ஜனநாயக சித்தாந்தத்திற்கும், மனித தர்மத்திற்கும் நேர்விரோதமானது.

பாராளுமன்றத்திலே கட்சியின் பெரும்பான்மைப் பலத்துடன் புரியும் செயல்கள்யாவும் நீதியானவையென்று நாமகருதமுடியாது. அரசாங்கம் நீதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. அரசாங்கம் நீதிக்கு முக்கியத்துவம் அளித்து, நீதிநெறியைக் கடைப்பிடித்துப் பிரசைகளைப் பரிபாலிக்கவேண்டும். பெரும்பான்மைப் பலத்தினால் மக்களின் தலையை எண்ணிக்கைபோடுவதில் மாத்திரம் ஜனநாயகம் தங்குவதில்லை. மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும், அவற்றை அனுசரிக்க வழிவகுப்பதும் தான் ஜனநாயகத்தின் குறிக்கோளாக அமையவேண்டும்.

பாராளுமன்றத்தின் உதவியுடன் 20-ம் நூற்றாண்டிலே அநேகர் சர்வாதிகாரிகளாக மாறினார்கள். பாராளுமன்றத்தில் தமக்குச்சார்பாகவுள்ள பெரும்பான்மைப்பலத்துடன் பாராளுமன்ற அரசியலைக் கலைத்தார்கள். சட்டத்தின்படி எதிர்க்கட்சியினரைக் கட்டுப்படுத்தினர். பெரும்பான்மைப்பலத்தின் உதவியைக்கொண்டு ஹிற்லர், முசோலினி என்போர் சர்வாதிகாரிகளானார்கள். பெரும்பான்மைப்பலத்துடன் சட்டத்தை அமைத்து யதேச்சாதிகாரத்துடன் உயர்ச்சியை அடைந்த ஹிற்லர் சிறுபான்மையினரை நிர்மூலமாக்க முனைந்தான். யூதவம்சத்தைப் பூண்டுடன் களைய முயற்சித்தான். சமூக தர்மத்திற்கொவ்வாத பற்பல தீங்குகளைச் செய்வதற்கு ஹிற்லர் முனைந்தபோது, பாராளுமன்ற பெரும்பான்மைவாக்கு அவனுக்குப் பக்கபலமாக நின்றது. ஹிற்லரைப்போல முசோலினி, ஸ்ராலின் என்போரும் சர்வாதிகாரிகளாக மாறினார்கள்

உலகின் பலபாகங்களிலும் பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலத்துடன் நீதிக்கும், மனித தர்மத்திற்கும் நேர்விரோதமாகப் பலசட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

பாராளுமன்றங்களில் உருவாக்கப்படும் எல்லாச்சட்டங்களும் நீதியானவையல்ல என்பதை மேற்படி உதாரணங்கள் விளக்குகின்றன. சர்வாதிகாரப்போக்குள்ள தலைவர்கள் பாராளுமன்றச் சிபார்சின்படி சொந்த இலட்சியங்களைப் பூர்த்திசெய்வதற்காகச் சட்டங்களை நீக்கியும் உருவாக்கியுமுள்ளனர். பாராளுமன்ற சர்வாதிகாரப் பாதையில்செல்லும் நமது அரசாங்கம் தனது பிழையான இப்போக்கைவிட்டு நாட்டின்நலனைச் சிந்தையிற்கொண்டு செயலாற்றவேண்டுமென்று விழைகின்றோம்.

ஏ. எஸ். எல்.

---


### LAND FOR SALE

One plot of 10 lms. of land called மூக்கறையன் கொட்டாங்காடு Situated at Naranthanai, Kayts. Offers are invited. Apply to the Treasurer, American Ceylon Mission, Diocesan Office, Manipay, before the 25th of February, 1961


---

### நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். சதாசகாயமாதாவினதும் அர்ச் சின்னத்தெரேசம்மாளின் சலுகையினாலும் நான் நெடுநாள்ஆசித்து வேண்டிக்கொண்ட அச்சசகாயத்தைப் பெற்றுக்கொண்டதின்பேரில் நேர்த்தியின்படி, அவர்களுக்குப் புகழ்ச்சி நன்றியாக இதைப்பிரசுரிக்கிறேன். அவர்களின் திருநாமம் என்றும் எல்லோராலும், புகழப்படுவதாக.

NANATTAN. அடியாள்.

---

### திருமதி ஞானப்பு ஞானப்பிரகாசம் அம்மையாரின் தேகவியோகம்

தெல்லிப்பளை, வீமன்காமத்தில் புராதனச்சிறப்புடன்விளங்கிய இலங்கைவாகுவம்சத்திலே வந்துதித்த ஸ்ரீமான் தியோகுப்பிள்ளை சுவாம்பிள்ளையினதும், அவரது பத்தினியாரும், பண்டத்தரிப்பு சிறகாரியமுதலி மணியஉடையார் வழித்தோன்றலுமான மதலேனாப்பிள்ளையினதும் பேர்த்தியாரும், காலஞ்சென்ற அறவியார் டேவிற்அவர்களின் அருமைச்சோதரியுமான திருமதி ஞானப்பு ஞானப்பிரகாசம் (அம்மா) அவர்கள் அண்மையில் காலஞ்சென்றாரென்னும் துயரசெய்தி கேட்டு மனம்வருந்தலானோம்.

இவர் யாழ்ப்பாணக் கத்தோலிக்க பாடசாலைகள் பலவற்றிலும், சிறப்பாகப் பண்டத்தரிப்புக் கத்தோலிக்க பாடசாலையிலும் அருந்தொண்டாற்றிய காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் செல்லையா ஆசிரியரின் அருமைப் பத்தினியார். காலஞ்சென்ற ஆசிரியர் சாமிநாதர், ஏழாலையைச்சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் ஜெரேமியாஸ் என்போரின் சோதரி. மட்டக்களப்பு, அரசினர் திணைக்கள நிலஅதிகாரி திரு. சைமன் பொன்ராசாஅவர்களின் மாமியார். கற்கடந்தகுளம் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியை செல்வி மேரி செல்வம் பொன்ராசா, அரசினர் திறைசேரி கணக்குப்பரிசோதகர் திரு. ஜொக்கீம் செல்வராசா என்போரின் பேர்த்தியார்.

இவ்வம்மையார் கள்ளமில்லா வெள்ளை உள்ளத்தினர். உள்ளொன்று வைத்துப் புறமொன்றுபேசுந் தன்மையற்றவர் எத்தருணத்திலும், எக்கருமத்திலும் தன்மனதுக்குச் சரியெனப்பட்டதை அஞ்சாது செயலாற்றுபவர். பாரபட்சமற்ற சீரிய நோக்கினர். கத்தோலிக்கசேவையில் கலந்துகொள்வதில் தனிஆர்வம் காட்டி வந்தவர். பண்டத்தரிப்பு, அர்ச். அந்தோனியார்கோயில் திருக்குடும்பக்கூட்ட அங்கத்தவராக இருந்ததுடன் அக்கூட்ட நிகழ்ச்சிகளிலும் சிறப்பாகத் தொண்டாற்றியவர்.

கடந்த சிலமாதங்களாக விருத்தாப்பிய நோயால்வருந்திய இவ்வம்மையார் நோயின் கொடுமைகளையும், இன்னல்களையும் பொறுமையுடன் அனுபவித்து, தமது 68-ம்வயதில் கடந்த 3-2-61 ஞாயிறுவாரம் நண்பகலில் புன்முறுவல் பூத்த வதனத்துடன் தமதாவியை ஆண்டவன் கரங்களில் அர்ப்பணிக்கலாயினர். இவரின் பிரேதமானது அடுத்தநாள் மாலை ஏழாலை, சில்லாலை, மாதகல், இளவாலை, ஊர்காவற்றுறை என்னுமிடங்களிலிருந்து வந்து கூடிய திரளான இனசனர், சிநேகிதர் மத்தியில், திருக்குடும்பக் கூட்டக் கௌரவ அணிகளுடன், வண. பிதா கோமஸ் அவர்கள் துக்கசங்கீதம் பாடிச் செல்லச் சேமக்காலை கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படலாயிற்று. இவளை இழந்து துயர்கொள்ளும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகிறோம்.

R. I. P.

---

### துக்கப் பூசை

யாழ்ப்பாணத்திலே பிரபல வைத்தியராய்க் கடமைஆற்றி சென்ற மாதம் 26-ந் திகதி காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை அலோசியஸ் இராசையாவுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலில் இம்மாதம் 24-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 6-15 மணிக்கு ஓர் துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

### வைத்தியர் ம. அ. இராசையா அவர்களின் மறைவு

யாழ்ப்பாணப் பட்டணவாசியும், பிரபல வைத்தியரும், சிறுபிள்ளை வைத்தியத்திற் கைதேர்ந்தவரும், யாவராலும் நன்கு அறியப்பெற்றவருமான திருவாளர் மனுவேற்பிள்ளை அலோசியஸ் இராசையா அவர்கள் கடந்த தை மாதம் 26-ந் திகதி காலை கொழும்பிலே ஹவ்லொக் ரவுணிலுள்ள தமது ஏகபுதல்வியின் இல்லத்திலே காலமாயினர். இவர் சொற்பகாலம் நோய் வாய்ப்பட்டிருந்து கடைசித் தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுத் தமது எழுபத்தொராம் வயதிலே தமதுஆன்மாவைக் கடவுளிடம் ஒப்படைத்தார். மரித்த மறுநாட் காலை இவரது பூதவுடல் இனபந்துக்கள், நண்பர்கள் சமேதராய் அடக்கத்துக்கெடுக்கப்பட்டுச் சென்று அர்ச். தெரேசம்மாவின் ஆலயத்திலே அதன் கட்டளைக் குருவரான வண. பிரென்டோ சுவாமியார் தலைமைதாங்க வண. எட்வின் பெர்னாந்தோ சுவாமியார் துணைபுரிய நமது திருவேதக் கடைசிச் சடங்குகள் நிறைவேற்றப் பெற்றது. பின்னர் கனத்தை சேமக்காலையில் குருவானவரின் கடைசி ஆசீர்வாதத்துடன் அவர் பூதஉடல் நல்லடக்கம் செய்யப்பெற்றது.

இவரை இழந்து துன்புறும் பிரிய மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகளுடன் நாமும் அனுதாபப்படுகிறோம்.

இறைவன் நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளுவாராக.

---

# திரிகோணமலை மேற்றிராசனச் செய்திகள்

### ● மரியாயின் மைந்தர் சபை ஆண்டுவிழா.

திருகோணமலை மேற்றிராசன **"மரியாயின் மைந்தர் சபை"** வைகாசி மாதம் 11-ம் திகதி தனது ஆண்டு விழாவைத் திருகோணமலையிற் கொண்டாடவிருக்கிறது. ஞானஉபதேசம் கற்பித்தலை இவ்வருடம் சிறப்பாக ஆராய்ந்தறிவதாக இச்சபை தீர்மானித்துள்ளது. அண்மையில் மட்டக்களப்பில் நிகழ்ந்த ஆயத்த கூட்டத்தில் மகாவந். திருகோணமலை மேற்றிராணியார்அவர்கள் கத்தோலிக்க பாடசாலைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டதன் நிமித்தம் கத்தோலிக்க பிள்ளைகளின் ஞானக்கல்வியும், சூழலும் பாதிக்கப்பட்டிருக்கிறபடியால மேற்படி விஷயத்தைச் சபையின் ஆராய்வுக்கு எடுத்துக்கொள்ளும்படி வற்புறுத்தினர்.

### ● கார்மேல் மடப் பிரவேசம்.

திருகோணமலைப் பங்கைச்சேர்ந்த செல்வி பிறிசில்லா பிரான்சிஸ் அவர்கள் கடுகஸ்தோட்டையிலுள்ள பெரிய கார்மேல் மடத்தில்சேர்ந்து சிஸ்றர் திரு இருதயத்தின் மரியா எலிசபேத் எனும் பெயரைப் பெற்றுள்ளார்.

### ● ஹிங்குரு கொடையில்

ஹிங்குருகொடை கிறிஸ்து இராசா ஆலயத்தில் இருவாரங்களாகப் பெரிய ஞானவொடுக்கம் வண. அலோசியஸ், O. M. I. சுவாமி அவர்களாலும், வண. லூயிஸ், O. M. I. சுவாமி அவர்களாலும் போதிக்கப்பட்டது. ஞானஒடுக்க முடிவில், சென்ற ஞாயிறுவாரம் திருகோணமலை நல்லாயர் அவர்களால் பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் தேவதிரவிய அனுமானம் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## ஆசனக்கோவிலில் ஞானஒடுக்கம்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலையும், சுண்டிக்குளி சஞ்சுவாம்கோவிலையும்சேர்ந்த கிறீஸ்தவர்களுக்கெனத் தபசுகாலத்திலே ஆசனக்கோவிலில் பெண்பாலாருக்கென ஒன்றும், ஆண்பாலாருக்கென மற்றொன்றுமாக இருஞானவொடுக்கங்கள் இதுவரை போதிக்கப்பட்டுவந்தன. ஆனால், இம்முறை இருபாலாருக்குமெனப் பொதுவாக ஆசனக்கோவிலில் ஒன்றும், சுண்டிக்குளி சஞ்சுவாம் கோவிலில் மற்றொன்றுமாக இருஞானவொடுக்கங்கள் போதிக்கப்படவிருக்கின்றன. ஆசனக்கோவிலில் போதிக்கப்படும் ஞானவொடுக்கம் வருகிற பங்குனிமாதம் 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைமாலை ஆரம்பமாகி அடுத்த 12-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை முடிவாகும்.

## நகர்வாசிகளுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணநகரிலே தினமும்கொள்ளைகள் அதிகரித்துவருகின்றன. இதுவரை நூற்றுக்குமேற்பட்ட வீடுகளில் கொள்ளைகள்நடத்தும் திருடர்கள்எவருமே பிடிபடவில்லை. இரும்புப்பெட்டிகளைமுதலாய் அவர்கள் தகர்த்தெறிகிறார்கள். கார்களில்சென்றே கொள்ளையடிப்பதாகத் தெரியவருகிறது. சென்ற சனிக்கிழமைஇரவு பத்தாம்வட்டாரத்திலே ஐந்துவீடுகளில் கொள்ளையடிக்க முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், ஒன்றில்தான் திருடர்களுக்கு அதிர்ஷ்டம்கிட்டியது. அந்தவீட்டிலிருந்த நகைகள்எல்லாம் கொள்ளைபோயின. ஒருபுதுமணப்பெண்ணின் மற்றோர்வீட்டில் குழந்தைஒன்று வீரிட்டழுதபடியால் அப்பெண்ணின் தாலிக்கொடியும், மற்றும் பதினாயிரம்ரூபா பெறுமதியான நகைகளும் தப்பிக்கொண்டன. ஆகவே, திருடர்கள்மட்டில் நகர்வாசிகள் எச்சரிக்கையாய் இருப்பார்களாக!

## தீர்வைஏற்றமும் தடையும்

இலங்கையிலே புதியமோட்டர்இரதங்களை இறக்குமதிசெய்வதற்கு அரசாங்கம் தடைவிதித்திருப்பதாலும், இறக்குமதித்தீர்வை ஏற்றப்பட்டிருப்பதாலும் அநேக மோட்டர்விற்பனவு ஸ்தாபனங்கள் தங்கள்ஊழியர்களின் தொகையைக்குறைக்க அன்றேல்அவர்களின் சம்பளத்தைக்குறைக்கத் திட்டமிடுகின்றன. தற்போதைய இறக்குமதிக்கட்டுப்பாடு தொடர்ந்திருக்குமானால் ஆட்களைக்குறைக்க நடவடிக்கைஎடுப்பது தவிர்க்கமுடியாத காரியமென்றும், தற்போதைய ஊழியருக்கும் இரண்டுமூன்றுமாத காலத்திற்குத்தான் வேலைகொடுக்க முடியுமென்றும் அவைகள் தெரிவிக்கின்றன.

## போக்குவரத்துச் சபையின் நஷ்டம்

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு இவ்வருடத்தில் 2கோடியே 70லட்சம்ரூபா நட்டம்ஏற்படுமென மதிப்பிடப்படுகிறது. 1959-ம்ஆண்டு அதற்கு 1கோடியே 30லட்சம்ரூபா நட்டம் ஏற்பட்டது. சென்ற 1960-ம்ஆண்டின் நட்டம்பற்றியவிபரம் இன்னும்தயாரிக்கப்படவில்லை. செலவினங்கள் அதிகரித்துள்ளமையே இவ்வருடப் பெருநஷ்டத்துக்குக் காரணமாகும். எண்ணெய் உதிரிபாகங்கள், ரையர்கள், ரியூப்புகள் ஆகியவற்றின்தீர்வை அதிகரித்தமையால் மாத்திரம் 75லட்சம்ரூபா அதிகமாகச் செலவிடவேண்டியிருக்கிறது. பிரயாணிகளின்தொகை வெகுவாக அதிகரிப்பதால் அல்லது பஸ்சலார்களைத் தரப்படுத்துவதால்மாத்திரம் இவ்வருடநட்டத்தைக்குறைக்கமுடியுமாம்.

## தமிழ்ப்பாதுகாப்பு அணி

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகியாம்பகுதிகளிலுள்ள முஸ்லீம்களை அடக்கிய தமிழ்ப் பாதுகாப்பு அணிஒன்றைஅமைக்க நிந்தாவூர் எம். பி. ஜனுப் மஜீத்அவர்கள் ஏற்பாடுசெய்வதாகத்தெரியவருகிறது. சிங்களமொழிச்சட்டம் நடைமுறைக்குவந்தால் அத்தாலேமுஸ்லீம்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவார்களென்றும், உரிமையைப் பாதுகாக்கத் தமிழ்ப் பாதுகாப்புஅணியை அமைப்பது அவசியமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

## போக்குவரத்துச்சபைப் புதியபஸ்கள்

கிராமப்பகுதிகளிலே பஸ்போக்குவரத்துச்சேவையை அபிவிருத்திசெய்யும் நோக்கமாக இவ்வருடத்திலே இலங்கைப் போக்குவரத்துச்சபை 379பஸ்களை இறக்குமதிசெய்யவிருக்கிறது. இவற்றில் 100பஸ்கள் ஜேர்மனியிலிருந்தும், 140பஸ்கள் பிரித்தானியிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும். போக்குவரத்துச்சபை திருப்திகரமாக வேலைசெய்ய வேண்டுமானால் அதற்கு வருடம்ஒன்றுக்கு 300 அல்லது 350புதியபஸ்கள் தேவைப்படுமாம்.

## யாழ்ப்பாண நூல்நிலையம்

யாழ்நகரப்பிரமுகர்களின் கூட்டம் ஒன்று மேயர் ரி. எஸ். துரைராசா அவர்கள தலைமையில் கூடி, யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையகட்டடத்தின் இரண்டாவது கட்டடத்தைப் பூர்த்திசெய்வதற்காகக் குறைந்தபட்சம் ஒரு லட்சம்ரூபா நிதிதிரட்டுமாறு சித்திரைமாதத்தின் மூன்றுவதுவாரத்திலே காணிவல் — அதாவது களியாட்டுவிழாஒன்றை நடத்தவதெனத் தீர்மானித்திருக்கிறது. யாழ்ப்பாணத்திலும் பொருட்காட்சிகளை நடத்தி நிதிதிரட்டுவதற்குத் தங்களுக்கு உதவிசெய்யுமாறு வெளிநாடுகளின் தூதுவர்களைக் கேட்பதென்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## பத்திரிகைத்தாளும் தீர்வையும்

இலங்கையிலே பத்திரிகைத்தாள்களின்தீர்வையை அரசாங்கம் சென்ற தைமாதம் 26-ந்திகதியன்று காத்திராப்பிரகாரம்5சதவிகிதத்திலிருந்து 55 சதவிகிதமாக உயர்த்தியது. இந்தத்தீர்வைஏற்றத்தினால் இந்நாட்டில பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கெல்லாம் பெருங்கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிலே பத்திரிகைத்தாளுக்குரிய இறக்குமதித்தீர்வை தொன்ஒன்றுக்கு 31ரூபா 40சதம். ஆனால், இலங்கையிலே அதன்தீர்வை தொன்ஒன்றுக்கு ஏறக்குறைய 450ரூபாவுக்கு மேலாகும். இந்தத்தீர்வையேற்றமும், பிறஏற்றங்களும் பத்திரிகைகளை வாசிப்பவர்களைப் பலவழியாலும் பாதித்துக் கஷ்டப்படுத்துவனவாகும்.

## எஸ். எஸ். சி. மாணவ ஆசிரியர்கள்

எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்துள்ள 3,000 மாணவர்களை உடனடியாக ஆசிரியர்களாய் நியமிக்கவேண்டுமென்று கல்விமந்திரி தெரிவித்திருக்கின்றார். ஒவ்வொருதொகுதியிலுமிருந்து 20பேர்விகிதம் 'கோட்டா' முறையிலே இவர்கள் தெரியப்படுவார்கள். சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் தேர்ச்சியுள்ளவர்களும், எஸ். எஸ். சி. பரீட்சையிலே நான்குபாடங்களில் சித்தியடைந்தவர்களும், ஆசிரியத் தொழிலில் அனுபவபெற்றவர்களுமே முதலில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

# டிமசனட் ஆண்டவரும் இலங்கையும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

டிமசனட்ஆண்டவர் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட இந்தவேதபோதக குருப்பிரசாதிகள் 1847-ம் ஆண்டு கார்த்திகைத்திங்கள் 28-ம்நாள் இலங்கைக்குவந்து சேர்ந்தார்கள்.

டிமசனட்ஆண்டவர்அவர்கள் தம்முடைய குருப்பிரசாதிகள் இலங்கையில் அனுபவிக்கப்போகின்ற கஷ்டம், துன்பம், இக்கட்டு இடைஞ்சல்கள் எல்லாவற்றையும் நன்குஅறிவார். ஆனால், தேவனின் இராச்சியத்தை உலகம் முழுவதிலும் ஸ்தாபிக்கவேண்டுமென்று இவர் கொண்டிருந்த தணியாத அவாவானது இவற்றையெல்லாம் ஒருபொருட்டாக மதிக்கவிடவில்லை. இம்மேற்றிராணியாண்டவரே "நாங்கள் தொண்டாற்றவேண்டியபூமி எவ்வளவு விஸ்தாரமாய் இருக்கின்றது. 15,00,000 அஞ்ஞானிகள் மனந்திருப்பப்படவேண்டும். 1,50,000 கத்தோலிக்கருக்கு ஞானஉண்மைகள் போதிக்கப்படவேண்டும்" என்று கூறுவார்.

இம்மேற்றிராணியார் தம்முடைய குருக்கள் சீக்கிரத்தில் தங்கள் அப்போஸ்தொலிக்கதொண்டை ஆரம்பிப்பதைப் பார்ப்பதற்காகச் சிலசமயங்களில் பொறுமைஇழந்து நின்றனர். இவர்அனுப்பிய வேதபோதகக் குழுசிரேஷ்டரும், பின்னர் யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவருமான செமேரியாஆண்டவர் அவர்களுக்கு இவர்எழுதிய கடிதங்கள் எல்லாவற்றிலும் பின்வரும் வசனங்களைக் காணலாம். "நீங்கள் உங்களுடைய ஞானபோதகங்களினாலும், ஞானஉதவிகளினாலும் இலங்கையிலுள்ள கத்தோலிக்கமக்களை இஷ்டப்பிரசாதஅந்தஸ்தில் வைத்திருப்பது மாத்திரம் போதாது. அஞ்ஞானம்என்னும் அந்தகாரத்தின் நிழலிலும், மரணத்தின் நிழலிலும் இருக்கும்மக்கள் சத்தியவேத வெளிச்சத்தின்கீழ் கொண்டுவந்து சேர்க்கப்படவேண்டும். யேசுமேய்ப்பரின் ஞானமந்தையில் இல்லாத ஆடுகள்யாவும் அம்மந்தையிற்கொண்டுவந்து சேர்க்கப்படவேண்டும், அஞ்ஞானிகள்யாவரும் மனந்திருப்பப்படவேண்டும். இப்படியே இலங்கை நாடானது அஞ்ஞான இருளிலேநின்று இழுத்தெடுக்கப்பட்டு ஒரு கத்தோலிக்கநாடாக இலங்கும்பொன்னாளை நாமகாணமிக ஆவலுடன்இருக்கிறேன். என்னுடைய இந்தத்தணியாதஆவல் நிறைவேறினாற்றான் என்னுடைய இருதயம் பூர்த்தியாகும்.

அமலோற்பவ மரியநாயகியின் பரித்தியாகிகள் இலங்கைக்கு வந்துசேர்ந்தபொழுது இலங்கை இருந்த சீர்கேடான நிலைமை சொல்லுந்தரமன்று. இப்பரிதாபநிலைமையைப் பெத்தக்கினிஆண்டவர் அவர்கள், டிமசனட் ஆண்டவர் அவர்களுக்கு விண்ணப்பத்துடன் அளித்த விவரணத்திற் சுருக்கமாகக் கண்டோம். இப்போது செமேரியா ஆண்டவர் அவர்கள் கூறுவதை அவதானிப்போம்:

"இலங்கையில்ஏறக்குறைய1,50,000 கத்தோலிக்க மக்கள் இருக்கிறார்கள். இவர்களைப் பராமரிப்பதற்கு 33குருப்பிரசாதிகள் மாத்திரம் இருப்பதால் இவர்கள் வருடத்தில் ஒருமுறையாவது ஒரு குருவானவரைச் சந்திப்பது மிகவும் கஷ்டமாய் இருக்கிறது. இதனால் இக்கத்தோலிக்கரில் பெரும்பாலானோர் அஞ்ஞானிகளைப்போல் சீவிக்கிறார்கள். இவர்களுக்கு வெளிஆடம்பரங்களிற்றான் சமயம தங்கியிருக்கிறது. இவர்கள் ஞானஸ்நானம், மெய்விவாகம் என்னும இருதேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுற்போதும் என்றநோக்கத்தோடு இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில 150 வருடகாலமாக ஞானஉதவிகள் அற்று, குருக்கள் இல்லாமையால் கைநெகிழப்பட்டு இருக்கும் இக்கத்தோலிக்கரின் நிலைமை எவ்வளவு பரிதாபமானதாய் இருக்கும். இவர்கள் இருதயங்களில் விசுவாசமானது தணிந்துகொண்டு போகின்றது. இதை நாம் திரும்பவும் புதுப்பிக்க வேண்டும். அல்லாமலும் பதிதர்கள் போதிக்கும் துர்ப்புத்திமதிகளில் இருந்து இவர்களைப் பாதுகாக்கவும் வேண்டும். இஃது ஒருவாறாக இருக்க, கோவையில் இருந்துவந்து இலங்கையுள் புகுந்து பல கத்தோலிக்கரை நாசமாக்கிக் கொண்டுவரும் பிரிவினை ஆகிய தொற்றுநோய்க்கு ஒரு முற்றுக்கை இட முன்வரவேண்டும்...... இவைகள்தான் நானும் என் உடன் தொண்டர்களும் இலங்கையில் ஆற்றி முடிக்க வேண்டிய பெருந்தொண்டுகளாகும்."

உண்மையாகவே, இவ்வமலமரியின் பரித்தியாகிகள் ஆற்றிமுடிக்க வேண்டிய தொண்டானது மிகவும் கஷ்டமான தொன்றாகத் தான் இருந்தது. ஆயினும் இவர்கள் தாங்கள் தொண்டுபுரியும் பாதையில் முட்டுக்கட்டையாகவிருந்த கஷ்டதுன்பங்களைக் கண்டு மனந்தளரவும்இல்லை, பின்வாங்கவும் இல்லை தாம் தொடங்கிய பணியைக் கடைசிபரியந்தம் தைரியமாக ஆற்றிமுடிக்க வேண்டும் என்று முடிவுசெய்துவிட்டனர். எந்தக் கஷ்டதுன்பங்களைக் கண்டும் மனந்தளராமல் உயிரைத் தானும் பரித்தியாகம் செய்து இலங்கையைக் கத்தோலிக்க மயமாக்குவதற்குத் தீர்மானித்து விட்டனர். மக்கள் சஞ்சாரமற்ற காடுகளிலுங்கூட இந்தக் குருப்பிரசாதிகளின் குடிசைகளைக் காணலாம்.

இக்கஷ்ட துன்பங்கள் ஒருவாறிருக்க இலங்கைச் சுவாத்தியமோ, ஐரோப்பிய குருக்களுக்கு ஒத்துப்போகவில்லை. இந்த எல்லாவகைக் கஷ்டங்களினாலும் இவர்களிற் பலர் மரணத்திரைக்குள்ளானார்கள். 1860-ம்ஆண்டு சித்திரைமாதம் தொடக்கம் ஆடிமாதத்திற்குள் 5 இளம் குருப்பிரசாதிகள் பரலோக பிராப்தர்கள் ஆனார்கள். பின்னும்சிலர் நோய்வாய்ப்பட்டு இறக்குந் தருவாயில் இருந்தனர். இவற்

(தொடர்ச்சி 7-ம்பக்கம்)

## கொள்ளைஇலாபமும் தண்டனையும்

கொள்ளை இலாபம்அடித்து முதல் தடவையாகஅகப்படும் வர்த்தகர்களுக்கு அபராதமும், சிறைத்தண்டனையும் விதிக்கவேண்டுமென்றும், அதன் பிறகும் கொள்ளை இலாபம் அடித்து அகப்பட்டால் அவர்களின்சொத்துகளை அரசாங்கம பறிமுதல்செய்ய வேண்டுமென்றும் வாழ்க்கைச்செலவைக் குறைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கென்று நியமிக்கப்பட்டகமிற்றி தனதுஅறிக்கையில் சிபாரிசுசெய்திருக்கிறது. வர்த்தகர்களின் அனுமதிப் பத்திரங்களை நீக்கிவிடுவது போன்ற கடும்நடவடிக்கைகள் மூலமே உணவுப்பொருட்களில் கொள்ளை இலாபம் அடிப்பதைக் கட்டுப்படுத்த முடியுமென்றும் கமிற்றி தெரிவித்திருக்கிறது.

## ஐந்துகோடிரூபா மிஞ்சும்

சென்றஐப்பசிமாதம் 1-ந்திகதியன்று ஆரம்பமானதும், அடுத்த புரட்டாசி மாதம்30-ந்திகதியன்று முடிவடைவதுமான நிகழுமநிதிவருடத்திற்குரிய செலவினங்களை அரசாங்கம் பத்துச்சதவிகிதம் குறைத்திருக்கின்றது. அதனால் ஐந்துகோடிரூபா மிச்சமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. நிகழும்நிதிவருடச் செலவினங்களின் மொத்தத்தொகை 197கோடியே 30லட்சம்ரூபாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினசரி பூசை வழிகாட்டி

## அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஒ. | ஒருசந்தி நாள் |

### மாசிமாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 26 | ஞா. | 1 | தபசுகால 2-ம் ஞாயிறு (வி. ம.) | [ஊ] |
| 27 | தி. | | காலதினம் (வியாகுல மாதாவின் அர்ச். கபிரியேல் ஞா.) | [ஊ] |
| 28 | செ. | | காலதினம் | [ஊ] |


### பங்குனி மாதம்—1961

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பு. | | காலதினம் | [ஊ] |
| 2 | வி. | | காலதினம் | [ஊ] |
| 3 | வெ. | யே | காலதினம் | [ஊ] |
| 4 | ச. | மா. | காலதினம் (அர்ச். கசிமீர், லூசியார் ஞா.) | [ஊ] |

சத்திய வேத

## பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
மாசிமாதம் 23-ந் திகதி



# கத்தோலிக்க பிரசுர ஞாயிறுபற்றி

யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவர் தமது ஞானமக்களுக்கு

## விடுக்கும் நிருபம்

அன்பான குருப்பிரசாதிகளே! யேசுக் கிறீஸ்துநாதரில் எமக்குமிகவும் அன்பான பிள்ளைகளே!

கத்தோலிக்க பிரசுர ஞாயிறு நமது மேற்றிராசனத்தில் அடுத்துவரும் பங்குனிமாதம் 5-ந்திகதி அனுசரிக்கப்படும். கத்தோலிக்க பிரசுரங்களை வாசிக்கும் நற்பழக்கத்தை எமது கத்தோலிக்கர் மத்தியில் முன்னிலும் பார்க்க அதிகரிக்க — வளர்க்க நாம் விசேஷ முயற்சி எடுக்கவேண்டும். இந் நற்பழக்கம் சிறுபிள்ளைகள் மத்தியில் அவர்களோடேயே வளர்ந்து கொண்டு வரவேண்டும் ஆகவே, இது சம்பந்தமாகக் குருமாரும், சந்நியாசிகளும், ஆசிரியர்களும், பெற்றோரும் ஓர் இயக்கத்தை ஆரம்பித்தல் அவசியமாகும்.

இவ்வியக்கம் கத்தோலிக்க பிரசுர ஞாயிறு ஆகிய பங்குனிமாதம் 5-ந் திகதி விசேஷ செபங்களுடனும், முயற்சிகளுடனும் ஆரம்பமாகும். அது மூன்று அம்சங்களைக்கொண்ட ஒரு திட்டமாகும்.

1-வது அம்சம்: கத்தோலிக்க பிரசுரங்கள் பரம்பவும், விசுவாசத்திற்கும், நல்லொழுக்கத்திற்கும் மாறுன கொள்கைகளைப் பரப்பும் புத்தகங்களும், பத்திரிகைகளும் எம்மத்தியில் இருந்து ஒழிந்துபோகவும் மன்றாடுவோம். இக்கருத்துக்காக பங்குனி மாதம் 5-ந் திகதி எமது மேற்றிராசனத்திலுள்ள எல்லா விசாரணைப் பங்குகளிலும், தாபனங்களிலும் திருமணித்தியால ஆராதனை நடாத்தப்படும். இப்பத்தி முயற்சியில் பிள்ளைகளும், ஆசிரியர்களும் சிறப்பாகப் பங்குபற்றுவர்.

2-வது அம்சம்: ஒவ்வொரு விசாரணைப் பங்கிலும் அங்கு நுழையும் விசுவாசத்திற்கு அல்லது நல்லொழுக்கத்திற்கு மாறுன பிரசுரங்களை அகற்றிவிடக் கத்தோலிக்க சேவைக் குழுக்கள் முயற்சி எடுத்தல்.

3-வது அம்சம்: கத்தோலிக்க புத்தகங்களையும், பத்திரிகைகளையும் பரப்புதல். இத்தொண்டினையும், விசாரணைப் பங்குகளிலுள்ள சேவாசங்கக் குழுக்களே பொறுப்பேற்கும். தேவையான கத்தோலிக்க பிரசுரங்களை எமது அச்சகத்திற்குளழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

எமதுமக்களின் விசுவாசத்தையும், நல்லொழுக்கத்தையும் பாதுகாக்கும்பொறுப்பு மிகக்காத்திரமானது. ஆகையால், எமதுவிசுவாசத்தை உறுதிப்படுத்தவும், அதற்கு எதிரானதடைகளை நீக்கிவிடவும் நாம்எடுக்கும்முயற்சிகளை எல்லாம் சர்வேசுரன் ஆசீர்வதிப்பாரென்பது திண்ணம்.

தேவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துநாதரிலும்
அமலோற்பவ மரியன்னையிலும்
உங்களைநேசிக்கும்,

+ ஜே.எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.,
யாழ்ப்பாண மேற்றிராணியார்.
21-2-61

குறிப்பு: இந்தநிருபம் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமையில் இம் மேற்றிராசனத்திலுள்ள சகல கோவில்களிலும், சிற்றாலயங்களிலும் வாசித்து விளக்கப்படல் வேண்டும்.

# கொங்கோ நாட்டுப் படுகொலை

ஆபிரிக்காவிலே சமீபத்தில் சுதந்திரமடைந்த கொங்கோ நாட்டின் முதலாவதுபிரதமரான திரு பற்றிஸ் லுமும்பா படுகொலை செய்யப் பட்டாரெனப்பரந்த செய்தியானது அகிலமுழுவதுமே பெரும்அதிர்ச்சியை உண்டுபண்ணுவதாயிற்று. அதனுல் உலகின் பல்வேறுநாடுகளும் இந்த அரசியற்படுகொலை சம்பந்தமாய் ஆட்சேபித்ததும், அனுதாபம் தெரிவித்ததும் ஆச்சரியமன்று. இந்தவிஷயமாய் இலங்கைஅரசாங்கம் ஓரளவிலே முன்னணியில்நிற்க முனைந்தாற்போன்று ஆட்சேபித்ததோடும், அனுதாபம் தெரிவித்ததோடும் நின்றுவிடவில்லை. ஆயிரக்கணக்கான மைல் தூரத்துக்கப்பால் ஆபிரிக்கர்ஒருவர் கொலைசெய்யப்பட்டுவிட்டாரென்றசெய்தி நாராசம் ஒன்றே செவிக்கேறியதுபோன்று நம்பிரதமர்சிறிமா துடியாய்த் துடித்து, இந்த[illegible] கத்தின் பணக்க[illegible] பாராது இலங்கைமக்களின் துயரஉணர்ச்சியைத் தெரிவித்துக் கருமத்தைத்தெளிந்து கொள்ளுமாறு ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச்சபைக்கே உடனடியாக ஒருவிசேஷ தூதுவரை அனுப்பிவைத்திருப்பதும் அதிசயமன்று.

நிற்க,கொங்கோவில் அரசியற் தலைவர்களிடையே —அரசியற் கட்சிகளிடையே உண்டான பிளவைப் பயன்படுத்திப் பிற ஆதிக்கங்கள் செய்தசூழ்ச்சியே அந்நாட்டுக்கு இன்றையக்தியை உண்டுபண்ணியது. சுதந்திர கொங்கோஅரசாங்கம் வீழ்ச்சியடைந்து இன்றுள்ள குழப்பநிலை ஏற்படவேண்டிவந்த காரணங்களிலே கம்யூனிஸ்தர்களின் ஊடுருவலும் ஒன்றென்று கொங்கோவின் முன்னுள் பெல்ஜிய இராணுவதளபதி ஜெனறல்எமிலி ஜோன்சன்ஸ் கூறியிருப்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. எப்போது ஆட்டுக்கடாக்கள் தங்களுள்முட்டிச் சண்டையிட்டுக்கொள்ளும்; எப்போது இரத்தங்குடிக்கலாமென்று கனவிலும் அதேஎண்ணமாய்க் காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இத்தகையநிலைமை பெரும்வேட்டையாகும். ஐக்கிய நாடுகளின்சபைப் பொதுககாரியதரிசியான திரு டாக் ஹமர்ஷீல்ட்அவர்களைப் பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்று ருஷியா நெடுநாளாய் முயன்றுவருகின்றது. ஏன்? அதன் எடுப்புகளுக்கு அவர் எடுபடாதிருப்பதுதான். இந்தவேளையும் அது இந்தக்குரலைக்கிளப்பியுள்ளது. அதுபோதும் தாளத்துக்கெல்லாம ஆடிக்கொள்ளும் நாடுகள் அதனகுரலை ஆமோதியாதிருக்குமா? கொங்கோவிலே கொலையுண்ட லுமும்பாவின் வாரிசான திரு. கிஸாங்கா அமைத்துள்ள அரசாங்கத்தையே ஆதரிக்கவேண்டுமென்று அதுகூறினுல் அதற்கும் அவைகள் தலைகுனியுமன்ரோ! ஆனுல், திரு. கிஸாங்காவிடமிருந்து திரு. விக்றர் லுண்டுவா அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டாரென்று கிடைத்துள்ள பிந்தியசெய்தி அவற்றிற்கெல்லாம் பெருங்கலக்கமாகவேயிருக்கும்

அங்ஙனமாக,அன்று ஹங்கேரியபிரதமர் திரு. இம்றே நாகி அவர்கள் பதவியிலிருந்து வீழ்த்தப்பட்டபோது— அவரும், அவரதுஉடன்மந்திரிமாரும் ஒழித்துக்கட்டப்பட்டபோது இலங்கை அரசாங்கம் ஏன் ஆட்சேபிக்கவில்லை? புத்தலாமாகள் உட்படப் பதினுயிரக்கணக்கான திபேத்தியபுத்தர்கள் திபேத்தை அடிப்படுத்திய சீனர்களால் கொன்றழிக்கப்பட்டபோது எமதுஅரசாங்கம் ஏன் ஆட்சேபகுரல் எழுப்பவில்லை? காரணம், அந்தக்கொலைஞர்கள் கம்யூனிஸ்தர்கள் என்றபடியாலா? 1958-ம் ஆண்டு இலங்கையிலே ஒன்றுமறியாத தமிழர்கள் ஆயிரவருக்குமேல் தாக்கப்பட்டார்கள். சூறையாடப்பட்டார்கள். அநேகர் ஈவிரக்கமின்றி— மனுத்தன்மையின்றிக் கொலைசெய்யப்பட்டார்கள். [illegible]உள்ள எந்த [illegible]ங்கமோ, சாகிய[illegible]மோ கண்டிக்கவில்லை. ஆட்சேபிக்கவில்லை. இன்று கொங்கோவில் நடைபெறும் சம்பவங்கள் எமதுநாட்டுக்குத் தகுந்த ஓர் எச்சரிக்கையாகவேண்டும். அத்தகையஆபத்து இந்நாட்டிலும் ஏற்படாது தேசியஐக்கியத்தைக் காப்பாற்றவேண்டியது இன்றைய எமதுஅரசாங்கத்தின் பாரதூரமான கடமையாகும். பேச்சளவில்நின்ற தமிழினம் இன்றுசெயலில் இறங்கிவிட்டது. மொழிஉரிமைக்காகத் தமிழரசுக்கட்சி போராடத்தொடங்கிவிட்டது. சிறுபான்மை மக்களின் அடிப்படைஉரிமைகளை இங்கே அலட்சியஞ்செய்யும்அரசாங்கம் அங்கே கொங்கோவுக்காக மாரடிப்பது வெறும் கேலிக்கூத்தன்றி வேறென்ன?

எமதுநாட்டின் பொருளாதார அபிவிருத்தி நாளுக்குநாள் பெருமளவில் வீழ்ச்சியடைந்து, அரசாங்கத்தின் நிதிநிலைமை பெரிதும் திண்டாட்டமானநிலையை எய்தியுள்ளது. விலைவாசிகள் விஷம்போல ஏறிவருவதால் மக்கள்அனுபவிக்கும் கஷ்டநஷ்டமோ கொஞ்சநஞ்சமல்ல. இந்த நிலையிலே அரசாங்கம் நல்ல முறையில் பொருளாதாரதிட்டங்களைவகுத்து நாட்டினை முன்னேற்றுவதற்குப்பதில் மொழிப்பிரச்சினை, கல்விப்பிரச்சினை, சமயவழிபாட்டுப்பிரச்சினை ஆதியவற்றிலும், கடைசியாக இப்போது பாராளுமன்றப் பிரதிநிதிகள் அதிலே இருபது நிமிஷம்மட்டும் பேசவேண்டுமெனக் கட்டுப்படுத்தமுன்வந்து அவர்களின்பேச்சுரிமையிலுமாக இறங்காத்துறைகளில் அநாவசியமாகஇறங்கி வகுப்புவேற்றுமை, மதவேற்றுமை, மனவேற்றுமையை உண்டுபண்ணுவதிலே தனதுகவனமுழுவதையும் செலுத்துவதாகக் காணப்படுகின்றது. இத்தகைய நிலைமை நீடித்துக்கொண்டு போகுமேயானுல் எமதுநாட்டின்எதிர்காலம் கொங்கோவைப் போன்று இருள்சூழ்ந்ததாகவே இருக்குமென்க.

## வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சி

ஞாயிற்றுக்கிழமை (26–2–61) காலை 9-30 மணியிலிருந்து 10 மணி வரை வானொலியில் "மனந்திரும்பிய மைந்தன்" என்னும் நாடகம் கத்தோலிக்க வானொலிக் குழுவினரால் நடாத்தப்படும்.

செப அப் சபை வெளியீடு

## மாசி மாதம்

பொதுக்கருத்து: திருச்சபைப் பொதுச்சங்கத்திற்கு அவசியமான தயாரிப்புகள் சாதகமானமுறையில் முன்னேறும்படியாக வேண்டிக்கொள்வது.

வேதபோதக கருத்து: அரசியல் சுதந்திரம் பெறமுயலும் மக்கள் பொதுநன்மைக்கு எதிரான போங்குகளில் செல்லாதிருக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடச்சுடச் சுடர்ந்தபொன்

**பொன்னானது சுடச்சுடப் புத்தொளி காலுகின்றது. அதுபோல எண்ணரிய இன்னல்கள் ஒன்றன் மேலொன்றாய்க் குவிந்து இடர்செய்த காலத்தும் தன்னிலை கோணாது தங்கம்போற் பிரகாசித்தது அவர் ஞான வாழ்வு.**

நீரிலே நஞ்சைக் கலந்து குடிக்கக் கொடுத்தார்கள் வஞ்சகர்கள். நிர்மல மான நெஞ்சம்படைத்த அவர் சாக விலலை. கல்மனம்படைத்த கொடியவர்கள் கல்லால் எறிந்து கொல்லமுயன்றார்கள்; கர்த்தருள் பெற்ற அவர் கண்மூடித் துஞ்சவில்லை. சிலுவையில் அறைந்தார்கள். சீக்கிரத்தில் அவர் இறக்கவில்லை. கூரியவாளால் தலையைக் கொய்து எறிந்தார்கள். ஆண்டவன் திருவுளப்படி மரணித்தார்.

யேசுதேவனின் சிலுவை வேதனை அர்ச். முடியப்பரின் கல்லெறித்துயர், அர்ச். சின்னப்பரின் வாளாயுதவதை இத்தனையும் அனுபவித்தும் சித்தம் கலங்காத அந்த உத்தமன் யார்? அவர்தான் அர்ச். மத்தியாஸ்.

யேசுநாதர் மரித்து உயிர்த்து மோட்சத்துக்கு ஆரோகணமான பின்பு, திருச்சபையின் மூலைக்கல்லான அர்ச். இராயப்பர் தமது உடன்சீஷர்களுக்கு ஓர்அருமையான பிரசங்கம் நிகழ்த்தியபோது முப்பது வெள்ளிக் காசுகளுக்காக ஒப்பற்ற தேவனைக்காட்டிக் கொடுத்து, நான்று கொண்டு மாண்ட யூதாசின் ஸ்தானத்துக்கு வேறொருவரை நியமிக்க வேண்டுமென்று அர்ச். இராயப்பர் மற்றைய சீஷர்களுடன் கலந்தாலோசித்தார்.

ஆண்டவரின் அறிவித்தற்பிரகாரம் மத்தியாஸ் என்பவர் அந்தஸ்தானத்தைச் சுவீகரித்துக் கொண்டார். மகிமையுள்ள அந்தப்பட்டத்தைத் தனக்களித்த தேவனுக்கு மத்தியாஸ் மனப்பூர்வமான நன்றிகாண்பித்துத் தோத்திரம் செலுத்தினார்.

சுவிசேசத்தை எங்கெங்கும் சென்று போதித்துத் தங்கடனாற்ற வேண்டுமென்று சுறுசுறுப்புக் கொண்டார். யூதேயா-கலிலேயா, எத்தியோப்பியா முதலாம்தேசங்களுக்குச் சென்று சத்தியவேதத்தைப்பரப்பச் சலியாது உழைத்தார்.

சத்தியப் பொன்மறை எத்திசையிலும், அதிவேகமாகப் பரவிவந்தது. புனிதர் மத்தியாசின் போதகங்கள், புத்திமதிகள், புண்ணியக்கிரிகைகள், புதுமைகள் யாவும் வழிதவறிச்சென்று கொண்டிருந்த மக்களின வாழ்வை ஒளிபெறச் செய்தன. அநேகர் சத்திய கத்தோலிக்கத் திருமறையிற்சேர்ந்து உத்தமரானார்கள்.

சாத்தான் உள்ளம் குமுறினான். பாவிகள் பலர் ஈடேற்றப்பாதையில் கால்வைத்துச் செல்வதைக்காண அவனால் பொறுக்க முடியவில்லை. எத்தியோப்பிய மக்கள்மூலம் அவரைக் கொன்றுவிடச் சூழ்ச்சிபுரிந்தான். அதன் காரணமாகவே முன்கூறப்பட்டதுபோல அவர் எண்ணரிய இன்னல்களுக்குள்ளாகி வேதத்தின் மங்காத சாட்சியாக மரித்தார். கர்த்தர் பிறந்த அறுபத்து மூன்றாம் ஆண்டிலே அவர் ஆன்மா பூவுலகைநீங்கிப் பொன்னுலகடைந்தது. அந்த மகத்தான திருநாளைத் திருச்சபை மாசித்திங்கள் 24ஆம் நாள் கொண்டாடுகின்றது.

அர்ச் மத்தியாஸ் அவர்களின் தியாகவாழ்வு நமக்கு அழியாத பாடபுத்தகம். அவரது சாங்கோபாங்கவிர்த்திப்பு உன்னத உயர்வுக்கோர் எடுத்துக்காட்டு. அவர் அனுபவித்த இன்னல்கள் மோட்சமகுடத்தின் முன்னறிவிப்புக்கள். வீரம் மிகுந்த அவரது தேவசேவை எம்உள்ளத் தளர்ச்சியில் ஊக்கமருளும் வெற்றித்துவசம். கரைகாணமுடியாத அவரது பொறுமை எம் துயர்தீர்க்கும் பரமஔடதம். அவர் அனுபவிக்கு மோட்சானந்தம் எமக்குமொருநாள் கிடைக்கத்தக்கதாய் அவர்மூலம் ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

— M. V.

# மதச்சுதந்திரம் இல்லையேல் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

"இந்த அணுயுகத்தில் வேறு எந்த யுகமும் ஒருபோதும் கண்டறியாத அளவுக்கு மனித அறிவின் வரம்பும், மனித அனுபவமும் வளர்ந்துள்ளன. இத்தருணத்தில் அறிவுக்கும், வலிமைக்கும் நிலைக்களமான மிகப் பழமையான மூலஊற்றின் துணையை மீண்டும் நாம் நாடுகிறோம்; தீர்க்கதரிசிகளும், ஞானிகளும் நமக்குக் கூறி அருளிய மணிமொழிகளை நாம் நாடுகிறோம். சந்தேகத்தைவிட நம்பிக்கை வலிமை வாய்ந்தது. மனத்தளர்ச்சியைவிட மனஉறுதி ஆற்றல் படைத்தது; சில சமயங்களில் அருள் என்று குறிப்பிடப்படும் அன்பின் மூலம்தான் நமக்குள்ளேயும், உலகம் முழுவதிலுமே உள்ளவையுமான தீய சக்திகளை நாம் வெல்ல முடியும் என்பது அவர்கள் வாக்கு; இன்று மக்கள்குல வாழ்வுக்கே உலை வைக்கப் பார்க்கின்றன அந்த சக்திகள்."

மேற்சொன்ன காலை விருந்தை அடுத்து உடனடியாக நடைபெற்ற மற்றொரு விருந்திலும் ஜனாதிபதி பேசினார்; இந்த விருந்தில் சட்டமன்ற (காங்கிரஸ்) உறுப்பினர்களின் மனைவிமார்கள் கலந்துகொண்டனர். அவர்களிடையே பேசுகையில் அவர் கூறியதாவது:

"கெடுபிடிப்போர்க்கருவி ஒன்றாக நான் மதத்தை மதிக்கவில்லை. இரும்புத்திரைக்குப் பின்புறமுள்ளவர்களையும், நம்மையும் பிரிக்கும் வேறுபாடுகளின் சாரம் என்றே மதத்தை நான் மதிக்கிறேன். போராட்டத்தின் அடிப்படை முழுவதுமே நமது பலமான மதச் சுதந்திரம், நமது பலமான நம்பிக்கை ஆகியவற்றுடன் சம்பந்தமுள்ளது எனது பதவியேற்பு உரையில் நான் கூறமுற்பட்டதுபோல், நமக்குக் கிடைக்கும் நன்மைகள், அரசாங்கத்தின் தாராள மனப்பான்மையால் கிடைப்பவையல்ல; கடவுளருளால் கிடைப்பவை..."

"நாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் முறையின் கையாட்களிடம் மட்டும் ஏன் தங்கள் இலட்சியத்தின் இறுதி வெற்றியில் பலமான நம்பிக்கையும் ஒரு தனி ஒழுங்கும் இருக்க வேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நமது இலட்சியம் சரியானது என்றும் இறுதியில் அது வெற்றிபெறும் என்றும் நாம் நம்புகிறோம்; ஆனால் அதனிடம் நமக்குள்ள பலமான நம்பிக்கையை நாம் புலப்படுத்தினால் நான் அது வெற்றி பெற முடியும்.

"மதச் சுதந்திரமும், மத நம்பிக்கையும் அமெரிக்க சமுதாயத்தின் இரு கண்களாகும்."

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

# கியுபாப் பள்ளிகளில்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யிட்டு ஒரு டசினுக்கு மேற்பட்ட கத்தோலிக்க சங்கங்கள் எழுப்பிய கண்டனக் குரலை எந்தத்தின வர்த்தமானியோ, அன்றேல் வானொலி நிலையமோ கூறிப்பிரசித்தி கொடுக்கவில்லை.

பினார் டெல் றியோ மாகாணத்தில் ஏழைகளுக்கு உணவு பகிர்ந்த ஒரு குருவானவரைக் கைது செய்து நரம்பு சோரும்வரை குறுக்கு விசாரணை செய்தனர்; கஸ்திரோவின் ஏவலாட்கள் வேறொரு மாகாணத்தில் சமூக் உபகார ஊழியத்தில் ஈடுபட்டிருந்த கன்னியாஸ்திரிமாரை மடத்தைவிட்டு வெளியேறச் செய்தனர்.

எனினும் இந்தக் கலாபனை முயற்சிகள் முற்றும் பலிதமாகவில்லை. எதிர்த்துக் கண்டிக்கப்பட்ட கன்னியாஸ்திரிகளையும், குருமாரையும் பலர் ஆதரிக்கின்றனர். முன் வேண்டாவெறுப்பாயிருந்த கத்தோலிக்கர் பலர் திருச்சபையை ஆதரித்துக் காக்க முன்வந்திருக்கின்றனர். திருச்சபைக்கு விரோதமாக அரசாங்கம் நடாத்தும்பிரசாரத்தை எதிர்க்கும் நோக்கமாக அநேக துண்டுப்பிரசுரங்கள் வெளிவந்திருக்கின்றன.

சந்தியாகோவில் ஏழு ஆண்டுகளுக்குமுன் கஸ்திரோவின் உயிரைக் காத்துவைத்த அதிமேற்றிராணியார் அதே கஸ்திரோவின் ஆட்சியைக் கண்டித்து, கியுபாவில் கத்தோலிக்க பண்பாட்டை அழித்து, பதிலாக கம்யூனிச பண்பாட்டைப் புகுத்தச் செய்யும் முயற்சியைக் கடிந்து கூறினார்.

"கஸ்திரோவுக்காகப் போராடியவர்கள் கத்தோலிக்கர்; ஆனால், கம்யூனிஸ்தர் வெற்றியின் பலனை அடைந்து கொண்டார்கள்," என்றார் என்றிக் பெரெஸ் செரான்ரெஸ் அதிமேற்றிராணியார்.

# கத்தோலிக்க பிரசுரவாரம்
## (பங்குனி 5—12 வரை)

கத்தோலிக்க பிரசுரங்கள் "உண்மையின் ஆயுதங்கள்— அன்பின் ஆயுதங்கள்" 23-ம் அருளப்பர் 4-5-59. "ஒருவன் கத்தோலிக்கனாயிருந்து கொண்டு, தன்னை ஒரு கத்தோலிக்கன்என்றும் அழைத்துக்கொண்டு கத்தோலிக்க ஸ்தாபனங்களில் உறுப்பினராகவும் சேர்ந்துகொண்டு, கத்தோலிக்க பிரசுரங்களில் யாதொரு கவலையற்றவிதமாய் நடந்து கொள்வது சுத்த அபத்தம்"

— அர்ச். பத்தாம் பத்திநாதர்

ஆகையால், ஒவ்வொரு கத்தோலிக்கனும் கத்தோலிக்க பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியவைகளைத் தாங்கள்வாசிப்பதுடன், அவைகளை ஏராளமாய்ப் பரப்பவும், பிறர் அவைகளை வாசிக்கச்செய்யவும் ஆவன செய்ய முன்வரவேண்டும்.

## எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| பாலர்குறிப்பிடம் ... | 1-00 |
| சின்னக் குறிப்பிடம் ... | 75 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 05 |
| மாணவர் கிறிஸ்தவபோதகம் ... | 1-25 |
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I)... | 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் ... | 5-00 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) ... | 4-50 |
| ,, (தோல்) ... | 7-00 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ)... | 2-50 |
| ,, (தோல்) ... | 3-50 |
| செபச்செண்டு ... | 1-00 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ... | 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் ... | 40 |
| நித்திய ஆராதனை ... | 25 |
| இரா ஆராதனை ... | 25 |
| திருமணித்தியாலம் ... | 40 |
| திவ்வியபூசை மகத்துவம் ... | 2-50 |
| பூசை உதவி மந்திரம் ... | 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) ... | 15 |
| வேதாகமவாசிப்பு ... | 90 |
| சற்பிரசாத அன்பன் ... | 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ... | 2-50 |
| கிறீஸ்துவபோதகம் (Part I) ... | 1-25 |
| அர்ச். மார்க்கு சுவிசேஷம் ... | 1-25 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் ... | 1-50 |
| பசாம் ... ... | 1-50 |
| சிலுவைப்பாதை ... | 30 |
| மகா மனந்திருப்புதல் இயக்கப் பிரசங்கங்கள் ... | 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) ... | 1-50 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) ... | 4-75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| ,, (Part II) ... | 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| நவதின உற்சவம் ... | 75 |
| தருமஅப்பம் ... | 1-00 |
| பத்திச் சபைகள் ... | 20 |
| ஆத்தும தரிசனம் ... | 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| ஹெலேனா அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் ... | 40 |
| Oremus Book ... | 1-25 |
| ஆத்துமாக்களின் அழுகைக்குரல் ... | 1-55 |
| ஞானவொடுக்கப் பிரசங்கம் ... | 1-50 |
| இலங்கும் மகிமைமுடி ... | 30 |
| அர்ச். வாரம் ... | 95 |

● தபாற்செலவு பிரத்தியேகம்.

● புஸ்தகப் பெறுமதியின் அரைவாசிப்பணம் அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

அதிபர்,
சஞ்சுசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

விபூதித் திருநாளுடன் தபசுகாலம் ஆரம்பமாகிவிட்டது. தபசுகாலம் நபத்தின்காலம்; நமது திவ்விய இரட்சகரின் திருப்பாடுகளைத் தியானிக்குங்காலம்; எங்கள் பாவங்களுக்குப் பரிகாரம் தேடுங்காலம். நீங்கள் எப்படித் தபம் செய்யப்போகிறீர்கள்? கசையால் அடித்து, கஷ்டப்பட்டுப் பெரியதபசு செய்யவோ, பெரிய ஒறுத்தல் உபவாசங்களைச் செய்யவோ உங்களால் முடியாது. ஆனால், ஒன்றுமாத்திரம் உங்களால் செய்யமுடியும். உங்கள் கடமைகளை உற்சாகத்தோடும், நன்மனதோடும், சோம்பலின்றியும் செய்துவருவதே பெரிய பெரிய தபமாகும். பத்தியாகச் செபிப்பது, கூடுமானால் தினமும் திவ்விய பூசைக்குப் போவது, தாய்தகப்பன்மாருக்கும், பெரியோருக்கும் உதவிசெய்து அமைந்து நடப்பது முதலியன தபமாயிருக்கும். உங்களுக்கு விருப்பமான தின்பண்டங்களை அளவுக்குமிஞ்சிச் சாப்பிடாது விடுதல் போன்ற சிறு சிறு ஒறுத்தல் முயற்சிகளையும் செய்துவரலாம். கூடியளவு பாவச்சமயங்களை விலக்கி அடிக்கடி திவ்விய நற்கருணைபெற்று வருவதையே யேசு அதிகமாக விரும்புவார். உங்களுக்காகமாத்திரமல்ல, உலகத்தில் உள்ள பாவிகளுக்காகவும் இத்தபசுகாலத்தில் மன்றாடிவாருங்கள்.

உங்கள் அன்புள்ள அண்ணா.

## தயாள உள்ளம்

—( போல் அந்தோனி )—

### முன்பாகத்தின் சுருக்கம்:

நத்தால் திருநாளுக்கு டேவிட்டின் வீட்டில் ஏற்பாடுகள் தடல்புடலாயிருக்கின்றன. டேவிட் ஏலவே வயோதிபக் கிழவரை நத்தால் திருநாளுக்குத் தன் வீட்டுக்கு அழைத்துப்போவதாக வாக்குறுதி கொடுத்திருந்தான். தனது தகப்பனரிடம் அதை எப்படிக் கூறுவது என்று பயந்திருந்த அவன் ஒருவாறு பயத்தைச் சமாளித்துக்கொண்டு சொல்லிவிட்டான். அவன் எதிர்பார்த்ததற்கு மாருகத் தகப்பனர் அவனைப் புகழ்ந்தார். அணைத்து முத்தமிட்டுப் பாராட்டினர். கிழவனை அழைத்துவர உத்தரவும் கொடுத்தார். டேவிட் இந்த நற்செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியுற்றுத் துள்ளிக்குதித்தான். மிகுதியைத் தொடர்ந்து படியுங்கள்.

அன்று இரவு வெகுநேரம் டேவிட்டிற்குத் தூக்கம் பிடிக்கவில்லை. எல்லையற்ற இன்பவெள்ளம் அவனை அப்படியும் இப்படியும் புரட்டிக்கொண்டிருந்தது. அவனது அறையிலிருந்த அழகிய சுவர்க்கடிகாரம் பதினைந்து நிமிடங்களுக்கு ஒருமுறை "ஆவே! ஆவே! ஆவே!........."

மணி ஒன்று. டேவிட் தூங்கிவிட்டான். மர இலைகளினூடே வடிகட்டப்பட்டுவந்த நிலவின் பால் ஒளி திறந்துகிடந்த சன்னல்வழியாக அவன் முகத்தில் பாய்ந்தது. என்ன அழகான முகம்! நிலவைக் கண்டு மலரும் அல்லிமலரின் இதழ்களாக அல்லவா அவனது சிவந்த உதடுகள் மலர்ந்து விண்ணிலே நீந்தியோடும் வெண்ணிலவைப் பார்த்துப் புன்னகை செய்தன. அலை அலையாகச் சுருண்டு நெற்றியின்மேல் கிடந்த இரண்டு கேசச்சுருள்கள் தென்றலில் ஆடி அசைந்து, "தூங்கடா கண்ணே, தூங்கு!" என்று அவன் தலையை வருடித் தாலாட்டிக்கொண்டிருந்தது. அவனும் இன்பக் கனவுகளூடே தூங்கினன்.

பிலோவைத் தன் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு மேகக்கூட்டத்தில் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தார் தாத்தா. தாத்தாவின் முதுகிலிருந்தவாறே ஒவ்வொரு விண்மீனுகத் தொட்டுப் பரீட்சித்துக்கொண்டிருந்தாள் பிலோ. எழுந்து உட்காரக்கூடச் சக்தியற்றுக் கிடந்த அந்தக் கிழவருக்கு எங்கிருந்துதான் வந்ததோ இந்தச்சக்தி! "டேவிட் நீயும் வந்து ஏறிக்கொள்" என்றார்.

"வேண்டாம்! நான் இந்தப்பஞ்சுக்கூட்டத்தில்உருண்டு விளையாடப்போகிறேன்." டேவிட் அந்த வெண்மேகக்கூட்டத்தில் படுத்து உருளத்தொடங்கினன். "நீங்கள் இருவரும் முன்னேபோங்கள், நான் பின்னால் உருண்டுவருகிறேன்."

தாத்தாவின் முதுகிலிருந்தவாறே அண்ணன் உருண்டுவிளையாடுவதைப் பார்த்தபிலோவிற்கும் உருள ஆசைவந்துவிட்டது. "தாத்தா, நானும்உருண்டு விளையாடப் போகிறேன்."

"அப்படியா! உன் ஆசையை நான் ஏன் கெடுக்கவேண்டும்? வா, இரண்டுபேருமே உருண்டுபோகலாம்! யார் முன்னுக்குப் போகிறதென்று பார்ப்போம்!" தாத்தா பிலோவைக் கீழே இறக்கிவிட்டார். அவள் தன்முல்லைப்பற்களை வெளியேகாட்டிக்கொண்டு மடமடவென்று உருள ஆரம்பித்தாள். தாத்தாவும் உருளஆரம்பித்தார். தாத்தா பிலோவை முந்திவிட்டார். "பிலோ! வேகமாகஉருண்டுபோ! தாத்தாவை முன்னேவிடாதே!" என்று கத்தினன்டேவிட்.

தாத்தா வேகமாக உருண்டார். அவர் மேகக் குவியலின் அந்தத்திற்கே போய்விட்டார். டேவிட் நடுக்கிட்டான். அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. இனி நகர்ந்தாலும் போதும் கீழே விழுந்துவிடுவார். ஐயோ! அதுவும் நகர்ந்துவிட்டார். அடுத்த வினடி ... !

"தாத்தா!" டேவிட் வீரிட்டலறினன்.

"ஆவே! ஆவே! ஆவே! ... டாங்! டாங்! ..."

மணி ஐந்தரை. டேவிட் திடுக்கிட்டு விழித்தான். தாத்தாவுமில்லை, வெண்பஞ்சு முகிலுமில்லை, வெண்ணிலவுமில்லை. அவன் கண்டதெல்லாம் கனவு! "எல்லாமே கனவா?" என்று அவனேகேட்பதற்கும், பதறித்துடித்துக்கொண்டு அன்னம்மாளும் தொடர்ந்து சூசைநாதனும் உள்ளேநுழைவதற்கும் சரியாகவிருந்தது. அவர்கள்வந்த நிலையைக் கண்டு டேவிட்ஒன்றும் புரியாது விழித்தான். அவனைக்கண்டு அவர்கள்வியந்து விழித்தார்கள். "என்ன டேவிட்? என்ன நடந்தது?" தாயும், தந்தையும் ஏககாலத்தில் கேட்டனர்.

"ஒன்றுமில்லையே! ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?" டேவிட்டிற்கு எதுவுமேபுரியவில்லை.

டேவிட் இப்படிக்கேட்டதும் சூசைநாதனும், அன்னம்மாளும் மேலும்வியந்துபோனர்கள். "என்ன சற்றுமுன் நீ கூக்குரல்இடவில்லையா?"

"இல்லையே! எனக்கொன்றுமே புரியவில்லையே!" அவர்களைவிடப் பன்மடங்கு திகைத்துப்போனன் டேவிட்! அவன் கனவுகண்டு அலறியது அவனுக்கே தெரியவில்லை.

(தொடரும்)

> பாலர் பகுதிக்கு உரிய கதைகள், கட்டுரைகள், சிறுபாட்டுகள் இவற்றை எல்லாம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.
>
> அண்ணா,
> புனித அன்னாள் கோவில்,
> பாண்டியன்தாழ்வு,
> யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தெரியுமா? By Scio



இரையை இருஞ்சிப்பற்றும் சில பறவைகளின் கண்கள் அவற்றின் மூளைகளிலும் அதிகம்பெரியனவாகும். அவ்வாறிருப்பது அவற்றின் பார்வையை அதிகப்பற்ருன மக்களுடையதைக்காட்டிலும் குறைந்தபட்சம் எட்டுமடங்குடையதாகச் செய்கின்றது. இராசாளிப்பட்சிஒன்றின் கண்ணனது அத்துணைநன்ருகத் தசைநார்கள் பொருந்தியிருப்பதாலே அது தனதுகண்களை ஏறக்குறைய உடனடியாகத்தானே தூரதரிசினியிலிருந்து அணுதரிசினியாக மாற்றக்கூடியதா யிருக்கிறது.

—(∽)—

## கத்தோலிக்க பிரசுரவாரம்

அடுத்தமாதம் அதாவது பங்குனி மாதம் 5-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் இலங்கையிலே கத்தோலிக்க பிரசுரவாரம்கொண்டாடப்படவிருக்கிறது. தம்பி, தங்கையரே! கத்தோலிக்க பிரசுரவாரம் என்ருல் என்ன? அதன் நோக்கம் என்ன? என்பதை நீங்கள் அறிவீர்களா? கத்தோலிக்க பிரசுரங்களை, கத்தோலிக்க இலக்கியங்களைப் பரப்புவது, கத்தோலிக்க இலக்கியம் பரவவும், விருத்தியடையவும் வேண்டுமென்று மன்ருடுதல், கத்தோலிக்க பிரசுரங்களை வாசித்தல் என்பனவே இதன் நோக்கங்களா

இந்த வாரத்தில் உங்கள் பங்கு என்ன? இந்த வாரத்தில், கத்தோலிக்க பிரசுரங்கள் அதிகரிக்க வேண்டும், அவை பரவவேண்டுமென்ற கருத்துக்காக மன்ருடிவரலாம்; நீங்களும் கத்தோலிக்கசிறுவர் இலக்கியத்தை, சிறுவர் பிரசுரங்களைப் பரப்பலாம்; அவற்றை வாசிக்கலாம். உங்களுக்கெனப் பாதுகாவலனில் வெளிவரும் **"பாலர்பக்கத்தை"** வாசிக்கலாம். இன்னும், உங்களுக்காக இந்தியாவிலிருந்து வெளிவரும் அரிய அழகிய மாத இதழ் ஒன்றுண்டு. அதை வாங்கி வாசிக்கலாம்; அதைப் பரப்பலாம். [அதன்விலை ஆக 5 சதமே. அது உங்களுக்கு மிகவும் அருமையான பத்திரிகை. வர்ணப்படங்கள், அழகிய கட்டுரைகள், சிறுகதைகள், சிறு கவிதைகள் நிறைந்த மாத இதழ். அதுதான் **"நற்கருணை வீரன்."**

**"நற்கருணைவீரன்"** எத்தனை வேணடும் என்பதை உங்கள் பாடசாலைத் தலைமை ஆசிரியர் மூலமாகவோ, கட்டளைக்குருவானவர் மூலமாகவோ, **மனேஜர், அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு எழுதித் தெரிவித்தால் பெற்றுக்கொள்ளலாம்.


தலைவில்கோயில், அர்ச். அன்னம்மாள் திருப்பதி
1961-ம் வருட
பங்குனி 7-ம்—10-ம்திகதி திருவிழா

| | |
|---|---|
| பங்குனி 3-ந்திகதி: | கொடிமரம் உயர்த்தல். தினசரி மாலை 6-30 மணிக்கு நோவனைகள் தொடங்கும். |
| பங்குனி 6-ந்திகதி மாலை 6-30மணிக்கு: | பொன்டிவிக்கல் மாலைஆராதனை. |
| பங்குனி 7-ந்திகதி காலை 7-30மணிக்கு: | பாடற்பூசை. |
| பங்குனி 9-ந்திகதி மாலை 6-30மணிக்கு: | பொன்டிவிக்கல் மாலைஆராதனை. அதிமேன்மை தங்கிய சிலாப மேற்றிராணியாண்டவர் அவர்களால் பிரசங்கம். |
| பங்குனி 10-ந்திகதி காலை 7-30மணிக்கு: | திருநாட் பாடற்பூசை. |

யாத்திரிகட்குரியவீடுகள் மிகச்சிறுதொகையே எஞ்சியுள்ளது. வீடுகள் தேவைப்படுவோர் தயவுசெய்து கீழ்க்காணும்முகவரிக்கு விண்ணப்பித்து உரிய கட்டணம் செலுத்தி வீடுகளைப் பதிவுசெய்து கொள்ளவும்.

வண. பிதா, பரிபாலகர்.

வண. பிதா, பரிபாலகர்,
தலைவில்கோயில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீ மசனட் ஆண்டவரும் இலங்கையும்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

றைக் கண்டும் இக்குருக்கள் மனந்தளரவில்லை. அஞ்சா நெஞ்சம் படைத்த இக்குருக்களுக்குப் பின்வாங்குவதென்பது என்னவெனத் தெரியாமல் இருந்தது. தேவன் தங்களை ஒருபோதும் கைநெகிழ்ந்து விடமாட்டார் என்று இவர்கள் அவரிற் கொண்டிருந்த நம்பிக்கையை நன்றாகப் பெலப்படுத்திக் கொண்டு பின்னும் மேலதிகமான ஊக்கத்துடன் தங்கள் சேவையைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

தம்முடைய ஞானப்பிள்ளைகள் மரணம் அடைந்த செய்திகேட்டு டீ மசனட் ஆண்டவர் அனுபவித்த வியாகுலத்தை விபரிக்கமுடியாது. "இலங்கை என் ஞானப்பிள்ளைகளின் சேமக்காலையாக இருக்கின்றதே" என்று கூறிப்பிரலாபித்தார் அஞ்சா நெஞ்சம் படைத்த அமலமரியின் பரித்தியாகிகளின் ஞானத்தந்தை தைரியத்தைக் கைவிட்டு விட்டாரா? இல்லை; இல்லை. ஞானமைந்தரை இழந்த துக்கத்தினால் பிரலாபித்தார். ஏன்? எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்து நாதர் தமமுடைய நண்பன் லாசரை இழந்த துக்கத்தினால் பிரலாபிக்கவில்லையா? அப்படியே டீ மசனட் ஆண்டவர் அவர்களும் பிரலாபித்தார். ஆனால், தைரியத்தைக் கைவிடவில்லை, தேவனில் இவர் கொண்டிருந்த நம்பிக்கை தளரவில்லை. "என்னுடைய ஞானமைந்தரில் இன்னும் மூவரை இலங்கைக்கு அனுப்பி வைப்பேன்" என்று வீரங் கூறினர் இந்தத் தைரியநாதர். மீளவும் டீ மசனட் ஆண்டவர், "இவர்களையும் இலங்கை வெகுசீக்கிரத்தில் தனக்கு இரையாக்கிக்கொள்ளும்" என்று கூறினர். "இதை எண்ணும்போது என் இருதயம் துக்கத்தினால் பிளக்கின்றது. ஆயினும் இவற்றைப் பொருட்படுத்த மாட்டேன். இலங்கை கத்தோலிக்க மயமாக்கப்படவேண்டும்" என்றனர் மீண்டும்.

தன்நலம் கருதாது பிறர்நலத்தையே கருதும் இம்மேற்றிராணியாண்டவரும் அவருடைய ஞானமைந்தரும் ஆற்றிய நற்றொண்டுகள்யாவும் விழலாய்ப் போவதெப்படி? அவையாவும் தேவனின் சந்நிதியிலே அபயக்குரல் இட்டன. இலங்கையை எதுவிதத்திலும் மனந்திருப்ப வேண்டுமென்று குரலொலியெழுப்பின. தேவனும் இவ்வபயக் குரலுக்குச் செவிசாய்த்துத் தம்முடைய கருணையினதும், இரக்கத்தினதும் கண்களை இலங்கைவாழ்மக்கள்மீது நோக்கலானார். மாக்கள்போல இருந்தவர்கள் மக்கள்போல் ஆக்கப்பட்டனர். இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருந்துதவறினவர்கள் மீண்டும் அந்நிலைக்குக் கொண்டுவரப்பட்டனர். அந்தகாரநிழலில் இருந்தவர்கள் சத்தியவெளிச்சத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டனர். அஞ்ஞானிகளும் மனந்திருப்பப்பட்டனர்.

இதுகாறும், அமலோற்பவ மரியநாயகியின் பரித்தியாகிகள் இலங்கையில் ஆரம்பத்தில், ஆற்றிய தொண்டுகளைச் சுருக்கமாகக் கூறினோம். இவற்றில் இருந்து டீ மசனட் ஆண்டவர் அவர்கள் இலங்கை மக்களை ஒரு ஞானப்பிதாவுக்குரிய அன்போடு நேசித்துவந்தனர் என்பது தெளிவாகும். அவர் உண்மையாகவே இலங்கையை நேசித்தார்; எல்லாக்கஷ்ட துன்பங்களிலும் நேசித்தார். மரண பரியந்தம் நேசித்தார். தாம் மரணப்ராப்தராகி மோட்சத்திற்குப் போன பின் நூறு ஆண்டுகளாகவும் இலங்கையை நேசித்துக் கொண்டே வந்திருக்கிறார். அவர் மரணப்படுக்கையில் இருந்து கொண்டு கருதினால் பேர்ணடோ ஆண்டகையவர்களுக்கு எழுதிய கடிதத்திலும் முதலாய்த் "தேவனின் நேசத்திற்காக இலங்கையை மறந்துபோக வேண்டாம்" என்று எழுதினாராயின், டீ மசனட் ஆண்டவரின் அன்பு எத்தகையது தென்று கூறவும் வேண்டுமோ?

இற்றைக்கு 113 ஆண்டுகளுக்குமுன் அமலோற்பவநாயகியின் பரித்தியாகிகள் இலங்கைக்குவந்து தம்முடைய அப்போஸ்தொலிக்க தொண்டை ஆற்றத்தொடங்கினர். இன்னும் அவர்கள் அவ்வப்போஸ்தொலிக்க தொண்டை அயராவூக்கத்துடன் தொடர்ந்து ஆற்றிவருகிறார்கள். ஆனால், இலங்கை இன்னும் மெய்ஞ்ஞானத்திற்குள்ளாகவில்லை. இலங்கையில் நூற்றுக்கு எட்டுவீத கத்தோலிக்கர் மாத்திரம் இருக்கிறார்கள், தொண்ணூற்றிரண்டு வீதமானோர் பிறமதத்தினர். மேலும் இவ்வெட்டுவீத கத்தோலிக்கரில் எத்தனைபேர் உண்மையான கத்தோலிக்க சீவியம் நடத்துகிறார்கள்? இதுதான் இலங்கையில் தற்போதைய நிலைமை ஆனால், இந்நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்குப் போதிய குருப்பிரசாதிகள் இல்லை. ஆகையாற்றான் இவ்வமலோற்பவ மரியநாயகியின் பரித்தியாகிகள் சபை எனும் தாய் துக்கத்தினால் பிரலாபிக்கிறாள். எனவே ஈழத்தாயின் ஆண்மக்களிற் சிலர் என்கிலும் இத்திருத்தாயின் அழுகைக் குரலுக்குச் செவிசாய்த்துத் தாமும் அவளின் ஞானப்புத்திரராக முன்வருவார்களாக


**வெளிவந்துவிட்டது!**

## பாலர் குறிப்பிடம்

### புதிய பதிப்பு

சிறுபிள்ளைகள் ஞானோபதேசத்தை இலகுவாயும், கவர்ச்சிகரமாயும் கற்றுப் பயன் அடையும்படி இந்நூல் சிறுசிறு பாடங்களாகப் பிரிக்கப்பட்டு, விளக்கப்படங்களையும் புத்திமதிகளையும் அடக்கியுள்ளது.

பிரதிவிலை: ரூபா 1-00

10 25 அல்லது கூடியபிரதிகள் வாங்குவோருக்கு 20%கழிவு கொடுக்கப்படும்.

மனேஜர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


### நேர்த்தியின் பூர்த்தி

எனது அருமை மகளுக்கு நெடுநாளாக இருந்துவந்த வருத்தமானது தீராதிருக்கையில் யான் யேசுவின் திருஇருதயம், அர்ச். நித்தியசகாயஅன்னை, அர்ச். மிக்காயல் ஆகியவர்களிடம் விசேடமாய் மன்றாடினேன். என் மன்றாட்டின் பிரதிபலனாக மகள் தற்போது பூரணசுகம் பெற்றுவிட்டாள். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

மாதாவின் மகள்
அங்கம்பிட்டி, ...

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 2919**

செட்டிபுலம், வேலணை கிழக்கு
1. சி. கார்த்திகேசும்
2. மனைவி பூரணம் இருவரும்

—வழக்காளிகள்

எதிராக

செட்டிபுலம், வேலணை கிழக்கு
1. கணபதிப்பிள்ளை செல்லத்துரை

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2919-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1961ம் ஆண்டு வைகாசி மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை (13-5-1961) பிற்பகல் 2 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 651 க்கும் இன்னும் ரூபா 500 க்கும் 10-7-59 தொடக்கம் 25-2-60 வரைக்கும் 12% வட்டியும், அதன் பின் கூடிய முழுத் தொகைக்கு 5% வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும். இதில் கொடுபட்ட தொகை ரூபா 200/- கோட்டுச் செலவால் ரூபா 75/- கழித்த மிகுதி. கோட்டுச் செலவு ரூபா 147-60 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணை கோயிற்பற்று வேலணை கிழக்கு இறை "சொட்டைபிட்டிப்புலம்" நில பர. 22 வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிரும். எல்லை: கிழக்கு—றோட்டும், வடக்கு—கை ஒழுங்கையும், இராசையாவின் மனைவி நல்லம்மாவும் பங்காளரும், மேற்கு — வைத்திலிங்கம் சின்னத்தம்பியும், வேலுப்பிள்ளையின் கைம்பெண் இளையபிள்ளையும், தெற்கு — குமாரவேலுவின் கைம்பெண் வள்ளிஅம்மையும், கந்தையாவின் மனைவி சின்னம்மாவும் இது அடங்கலிற் சொரியலாய் $\frac{2}{3}$ பங்கும் அதில் 2 பரப்பு 12 குளியும் வீடும் கிணறும் நிந்தம்.

**இ. கனகரத்தினம்**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறைறோட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 1636**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
சின்னத்தம்பி பொன்னையா

—வழக்காளி

எதிராக

ஆனைக்கோட்டை
1. வல்லிபுரம் கந்தையாவும் மனைவி
2. காலஞ்சென்ற செல்லம்மாவும்

—எதிராளிகள்

(1-ம் எதிரி நேரடியாகவும், காலஞ்சென்ற 2-ம் எதிரியின் சொத்தின் சட்டப்படியான பிரதிநிதியாகவும்)

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1636-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1961- ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாசம் 25-ந் திகதி (25-3-61) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 2620/- மேலும் ரூபா 2000/- க்கு 21-5-57-ந் திகதி தொடக்கம் 1-8-60-ந் திகதி வரைக்கும் வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 381-07 சதமும்.

### காணிகளின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று தொக்குவில் இறை "ஆண்டிபுலம்" நிலப்பரப்பு $7\frac{1}{4}$, வீடும், செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை: கிழக்கு—

**விற்பனைக்கு:**

## தபசுகாலத்துக்குரிய நிருபங்களும் சுவிசேஷங்களும்

இச்சிறு நூல் தபசுகாலத்தில் அநுதின பூசையில் வாசிக்கப்படும் நிருபங்களையும் சுவிசேஷங்களையும் கொண்டு விளங்குகிறது. அத்துடன் ஆரோகணத்திரிதினப் பூசைநிருபங்களும், புரட்டாசியில்வரும் சதுர்காலப் பூசைநிருபங்களும், இணைக்கப்பட்டுள்ளன.

பிரதி விலை கிளேஸ்பேப்பர் ரூபா 2-00.
,, பைபிள் பேப்பர் ரூபா 2-25.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்**

**இல. M. B. 2827**

யாழ்ப்பாணம் கரையூர்
இல. 7, சந்தியோகுமையோர் கோவில்வீதி
1. எஸ். எஸ். ஜான்சன்
2. பெண் அஞ்சலீனு லீடா

—வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு
1. ஆழ்வான் வல்லிபுரம்

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 2827-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1961-ம் ஆண்டு பங்குனி மாசம் 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 3270/- ம் இன்னும் ரூபா 3000/- த்திற்கு 18 5-59 தொடக்கம் 20-8-59 வரையும் 100 க்கு 12% வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு 100 க்கு 5% வட்டியும் கோட்டுச் செலவும் இதில் ரூபா 1100/- இறுபட்டது.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை இலகடிகுளி 17·8-ம் கல்வீடும், கிணற்றுப்பங்கும், செய்பயிர் வான்பயிர்களும் இன்னும் அதற்குரியவைகளும். எல்லை: கிழக்கு—றோட்டும் முருகர் சிவகுருவின் ஆதனமும், வடக்கு—ஆழ்வான் பெண் நல்லபிள்ளையின் ஆதனம், மேற்கு—றோட்டு, தெற்கு—உலாந்தா மேஸ்தர் W. F. இரட்டினகோபாலால் விஸ்தரிக்கப்பட்ட 5-ந் திகதி புரட்டாசி மாசம் 1932-ம் ஆண்டு 66-ம் இலக்கப்படத்தில் 2, 3 என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட துண்டுகள். வடக்கேயுள்ள காணிக் கிணற்றுக்குப் போகும் வழி வாய்க்கால் பாவிப்பிற்காகப் பொதுவில் விடப்பட்ட இத்துண்டிற்கூடாகப் போகும் 4-ம் நம்பர் துண்டு கையொழுங்கையும் உட்பட இப்படம் 1348-ம் இலக்க பிரிவில் வழக்கில் அணைக்கப்பட்டிருக்கிறது.

**செ. இரத்தினசபாபதி,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
45, 4 ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 20-2-61.

கணபதி செல்லத்துரைக்குரிய ஆதனம், வடக்கு—செல்லப்பா மனைவி கனகம்மாவுக்கும், சின்னர் கந்தையாவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு — வல்லிபுரம் கந்தையாவுக்கும் மனைவி செல்லம்மாவுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு—ஒழுங்கை இதடங்கலும்.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.
643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை, 3-2-61.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## 'நாம் இருக்கும் நாடு'

### கத்தோலிக்கருக்குப் பரிசு

சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் யோசனைப்படி 1960—61க்கான பரிசுகளை ஐந்து தமிழ் நூல்களுக்கு வழங்க இசைந்துள்ளது சென்னை அரசாங்கம். இவ்வைந்து நூல்களில் ஒன்று டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்கள் இயற்றிய 'நாம் இருக்கும் நாடு' என்பது.

டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்கள் கோயமுத்தூர் மேற்றிராணியாராகிய மகாவந். சவிரிமுத்து ஆண்டகையவர்களின் உடன் பிறந்த சகோதரர். சென்னை பல்கலைக் கழகத்தில் சரித்திர ஆராய்ச்சியாளராக இருந்து வருகின்றார்.

❁ **திருவனந்தபுரம் ஆண்டகையின் வெள்ளிவிழா:** வந். வின்சென்ட்டி தெரியர் ஆண்டகையின் மேற்றிராணித்துவ வெள்ளிவிழா இத்திங்கள் 4-ஆம் நாள் கொண்டாடப்பட்டது. அருட்திரு ஆண்டகையை மகிழ்விக்க நடந்த நகர மக்களின் பொதுக்கூட்டத்திற்குக் கேரள முதன் மந்திரி பட்டம் தாணுபிள்ளை தலைமை தாங்கினர். ஏழைமக்கள் நலனிலும், கல்வித் துறையிலும் ஆண்டகை ஆற்றிவரும் அரும்பெரும் பணிகளைப் புகழ்ந்து பாராட்டிப் பேசினர். குடிவசதியற்றவர்கட்கு மேற்றிராசன அடிப்படையில் வீடுகள் அமைத்துத் தரும் சேவைத்திட்டம் வெள்ளிவிழா நினைவாக அன்றுகாலை ஆரம்பமாயிற்று.

❁ **கத்தோலிக்க இந்திய சங்கத்தின் (Catholic Union of India) புதுச் செயலர்:** இதுவரை செயலர் பதவி வகித்துவந்த திரு. A. T. O. பிண்டோ பம்பாய் நீதிமன்றங்களுள் ஒன்றில் நீதிபதியாக நியமனம் பெற்றிருப்பதால், அவருக்குப் பதிலாக, 20-1-61 முதல் திரு. எட்வர்ட் டி சூஸா செயலர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

❁ **பரிசுத்த தந்தைக்குத் தலைவலிதரும் நாடுகள்:** அரசினரின் யதேச்சாதிகார தலைவிரித்தாடும் பள்ளிப் பிரச்சினை காரணமாகப் பாப்பரசருக்குத் தற்போது தலைவலிதரும் நாடுகள் பிரிட்டிஸ், கயானா, ஹாய்த்தி, இலங்கை, சூடான், கினியா என்று 'ஒஸ்ஸெர் வாத்தோரே ரோமானோ' என்ற வத்திக்கான் தினத்தாள் தெரிவிக்கின்றது.

❁ **தியாகிகளைப் போற்றியவருக்குச் சிறைத்தண்டனை;** 1956-ல் ஹங்கேரியில நடந்த குழப்பத்தில் அநேக குடிமக்கள் கம்யூனிஸ்ட் கெடுபிடியை எதிர்த்துநின்று சுதந்திரத்துக்காகப் போராடி உயிர் நீத்தனர். அவர்களுடைய தியாகத்தையும், மனோ வலிமையையும் பாராட்டி, குறுஞ் சுவடிகள் எழுதி வெளியிட்டதாகவும், ஞானோபதேச வகுப்பில் பிள்ளைகள் முன்பாகப் புகழ்ந்து பேசியதாகவும் சங். ஆண்ட்டாங் லோட்ஸ் சுவாமிகள் ஹங்கேரிய அரசினரால் குற்றம சாட்டப்பட்டு, ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றுள்ளார்.

### கூட்டத்தைப் பகிஷ்கரித்ததற்குத் தண்டனை

கங்கேரியில் கையோர் என்னும் மேற்றிராசனத்து குருத்துவமாணவர்கள் திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்ட "சமாதானக் குருமாரால்" ஒழுங்கு செய்யப்பட்ட ஒருகூட்டத்தைப் பகிஷ்கரித்த காரணத்துக்காக, அக்குருமடத்தின் சிரேஷ்ட மாணவரையும், அதன் அதிபரான நெடெசோங்ஸ்கி சுவாமியாரையும் பதவிநீக்கம் செய்திருக்கிறது கங்கேரிய அரசாங்கம்.

❁ **இன்றைய உலகின் மொத்த மக்கட் தொகை:** 288 66,91,000. இதில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், பிரிவினைச்சபைக் கிறிஸ்தவர்கள், புரோட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்கள் ஆக எல்லாக் கிறிஸ்தவ மக்களின் தொகை சுமார் 100,00,00,000. கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டும் 52,76,43,300 (18%).

## பாப்பரசரின் கோடைவாசம்

### வத்திக்கானிலேயே இருக்கும்

வரும் கோடைக்காலத்தில் பாப்பரசர் காஸ்தெல் கன்டேல்போவுக்குச் செல்லமாட்டார், வத்திக்கானிலேயே தோட்டத்தில் அமைந்துள்ள ஒரு கோபுரமாளிகையில் தங்கியிருப்பார் என்று கூறப்படுகிறது. பொதுச் சங்கத்துக்காகத் தயார் செய்யவும், திருயாத்திரிகர்களை எளிதில் வரவேற்றுப் பேட்டியளிக்கவும் இவ்வேற்பாடு சாதகமாயிருக்கும்என்று அவர் கருதுகின்றார்.

### பாப்பரசரைக்காண ஓர் விநோதமுறை கையாளப்பட்டது

திவ்விய யேசுவின் பிரத்தியட்ச திருநாளன்று, நூற்றுக்கணக்கான கார்ச்சாரதிகள் அர்ச். பேதுருவானவர் மாதேவாலயத்து முன்றிலில் கூடிக் காதுகள் அதிரும்படி தங்கள் கார்களின் "கோர்ணை" அமுக்கிக் கூச்சலிட்டனர். அதன் காரணமாகப் பாப்பரசர் தமது அறையின் யன்னலில் காட்சிகொடுத்தார் சத்தம் அமைதி பெற்றதும் அவர்களைத் திரிகாலச் செபம் ஓதும்படி செய்து, தமது ஆசீர்வாதமருளினர்.

## வத்திக்கான் பொதுச்சங்கம்

### ஒரு முக்கிய விவாதப் பொருள்: இல்லறத்தாரின் அப்போஸ்தலம்

பொதுச் சங்கத்திற்காகத் தயார் செய்யும் மத்தியக்குழு "1960ல் பரிசுத்த ஸ்தானத்தின் அலுவல்கள்" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிடப்போகின்றது. வரும் பொதுச் சங்கத்தில் இல்லறத்தாரின் அப்போஸ்தலம் ஒரு முக்கிய விவாதப் பொருளாயிருக்கும். திருச்சபையின் அமைப்பில் அது அதிக முக்கியத்துவம் பெற்றுவிட்டது. தலைவர்கள் அனைவர்க்கும் மிகப் பிரியமானதாகிவிட்டது. ஆதலால், விபரமாக விவாதிக்கப்படும் என்று அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

# இதோ, இரட்சணியத்தின் காலம்!

ஒருவன் இரட்சணியத்தை அடைய வேண்டுமாயின் செபம், தபம், தானதருமம் ஆகிய நற்கிருத்தியங்களை அனுசரித்தாகவேண்டும். ஆதித்தாய் தகப்பன் தேவகட்டளையை மீறியதால் கடவுள் மனுக்குலத்திற்கு இட்ட மரண தண்டனையையே திருச்சபை விபூதிப்புதனன்று எல்லோருக்கும் ஞாபகமூட்டித் தபஞ்செய்யும்படி வேண்டுகின்றது. பழையஏற்பாட்டில் பிதாப்பிதாக்களும், திருச்சபையின் ஆரம்பகாலத்தில் மனந்திரும்பிய பாவிகளும், சாம்பலைப்பூசிக்கொண்டு தபம் செய்ததைப் பின்பற்றியே இச்சடங்கு நடைபெறுகின்றது. பாவிகள் விபூதித் தினத்திலிருந்து நாற்பதுநாட்களும் ஆலயத்திற்கு வெளியேநின்று தபம் செய்தபின் பெரிய வியாழனன்று ஆலயத்திற்குள் சேர்க்கப்பட்டுப் பாவப் பொறுத்தல் பெறுவர். நமது ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதர் நாற்பதுநாள் இரவும்பகலும் ஒன்றும் சாப்பிடாமலும், குடியாமலும், உபவாசமாயிருந்து தபம் செய்தார்.

யோபுமுனிவர் உடம்பின்மேல் சாம்பலைத்தூவி, தாழ்ச்சியுடன் தேவனின் இரக்கத்தைவேண்டினர். தேவகோபத்தில்நின்று தப்பிக்கொள்ளத் தாவீது அரசன சாம்பலை அப்பத்தோடு தாம் சேர்த்ததாகக் கூறியுள்ளார். சாம்பலும், சாக்குத்துணியும் அணிந்து தபம் செய்த "நினிவே" நகரத்தாருக்குத் தேவன் மன்னிப்பளித்தார். நாமும் நம் முன்னோரைப் பின்பற்றி நமது பாவங்களின் கனத்தை அறிந்து அவற்றிற்கேற்றவாறு தபம்செய்யத் தயாராயிருக்கவேண்டும்.

இருதயத்தில் மனஸ்தாபத்தை உண்டுபண்ணுவதே தபசின் நோக்கமாயிருக்கவேண்டும் என்றும், வெளிவேடத்தை விலக்கவேண்டும் என்றும், சுவிசேஷத்தில் விலக்கப்பட்டிருக்கிறது. ஒருசந்தி, உபவாசம் இவைகள் மட்டும்தான் தபம் என்று எண்ணுவது தபத்தின் கருத்தை மட்டுப்படுத்துவதாகும். இந்த அனுட்டானங்களைத் திருச்சபை அங்கீகரித்து வற்புறுத்தி வருகின்றது என்பது வாஸ்தவம். ஆனால், நூற்றுக்கு ஐம்பதுபேர் அத்தகைய தபசுள்ள சீவியம் சீவிக்கமுடியாது. ஆனால், புத்தி விபரம் அறிந்த பிள்ளைமுதல வயோதிபர் ஈறுகத் தபசுசெய்யக் கடமைப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் அந்தக் கடமையை நிறைவேற்றுவது எவ்வணணம்? தங்கள் அனுதின சீவியத்தில் நேரிடுகிற சிலுவைகளை ஏற்றுக் கொள்வதில் தான்? "மகனே! நான் உனக்குக் கொடுக்கிற சிலுவையை எடுத்து உன் இருதயத்தில் வை. அது எப்போதும் உன் கண்முன் இருக்கட்டும். அதைக் காணும்போதெல்லாம் எனது சிநேகத்தின் விலையேறப்பெற்ற அடையாளமாக அதைத் தைரியத்துடன் அரவணைத்துக்கொள்" என்று யேசுநாதர் அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்குச் சொன்னர்.

நமது நாளாந்த சீவியத்தில் அநேக சிலுவைகள் நமக்கு ஏற்படுகின்றன. நமது சொந்த வீட்டிலேயே கல்வாரி மலை இருக்கக்கூடும். நமது எண்ணத்தில் ஏமாற்றம் ஆவலுடன் எதிர்பார்த்த காரியம் தவறிப்போதல், பணக்கஷ்டம், கஸ்திவியாகுலம், மரண சம்பவம், இவையெல்லாம் வீட்டில் விளையும் சிலுவைகள்; அவற்றைத் "தண்டனை" என்று எண்ணுவது பெரும தவறு. நமது சிநேகத்தைச் சோதிக்கிற சாதனங்கள் அவை. இயேசுநாதரின் சொந்தத்தாயாருக்குமுதலாய் இவ்வித சிலுவை இல்லாமல் போகவில்லை. அவள் அழுது கண்ணீர்சிந்தி, மனவேதனை அனுபவித்து அதன்மூலம தனது ஆத்தும அழகையும், உருக்கமுள்ள இரக்கத்தையும் அதிகரித்துக்கொள்ள வேண்டுமென்று சித்தமானர்.

கடும் வருத்தத்துடன் மரணப்படுக்கையில் இருக்கும் வியாதிஸ்தனுக்குமே தபம்செய்யும் கடமை நீங்கிப் போகவில்லை. நீண்ட காலம் சுகயீனமாய்ப் படுக்கையில் படுத்துக் கிடப்பவனும் சந்நியாசிக்கொத்த கடும் தபசீவியம் சீவிக்கலாம். "அவனன்றி அணுவும் அசையாது" நமது தோளில் அவர் சுமத்தியிருக்கிற சிலுவை எத்தகையதென்று அவருக்குத் தெரியும். அவர் நமக்கு அனுப்பும் சிலுவை சுமப்பதற்கு எப்போதும் இலகுவாய்த்தானிருக்கும்.

நமது சொந்தச் சுபாவக்குணமே நமது சிலுவைகளிலெல்லாம் அதிபாரமான சிலுவையாகும். நம்மை ஒறுத்துப் பொறுமை என்னும் புண்ணியத்தை அனுசரிப்பதன் மூலம் நாம் அதி உன்னத தபத்தை அனுசரிக்கலாம்என்று கிறிஸ்துநாதர்தாமே தமது திருப்பாடுகளின்மூலம நமக்குக் காட்டியிருக்கிறார் "எனது பிரிய மகளே! நீ உன்னைத் திருத்திக் கொள்வதற்காக உதாரமாய் உழைக்கிறதைக்கண்டு எனக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால், உனது அர்ச்சிப்புக்குச் சாதனங்களாக உனது குறைகள் என்ற சாட்டைகளை உன்கையில் விட்டுவிடுகிறேன், உன்னை எவ்வளவு தூரம் திருத்தியிருக்கிறாய் என்று பூமியில் இருக்குமளவும ஒருக்காலும் அறியமாட்டாய் என்று நமதாண்டவர் பத்தியுள்ள ஒரு கன்னிகைக்குச் சொன்னர்.

"என் கற்பனைகளைக் கண்டிப்பாய்க் கைக்கொண்டு அனுசரிக்கிறவன் எவனே அவனே என்னைச் சிநேகிக்கிறவன்." கற்பனைகளைக் கரிசனையுடன் அனுசரித்து, அவற்றின் ஒவ்வொரு பாகத்தையும் அது பெரிதாயிருந்தாலும்சரி சிறிதாயிருந்தாலும்சரி பிரமாணிக்கமாய்க் காப்பாற்றுவதுதான் தபத்தின் விசேட இலட்சணமும் உச்சநிலையுமாகும். எனவே, நாம் கற்பனைகளைப் பிரமாணிக்கத்துடன் அனுசரித்து இத் தபசுகாலத்தில் ஒறுத்தல்முயற்சிகள் செய்து நம் பாவத்திற்கு மன்னிப்பைப் பெற்றுக்கொள்வோமாக! பரிசுத்த தேவமாதாவும் தரிசனைகொடுத்த போதெல்லாம் தபம் செய்யுங்கள் என்றுதான் மக்களை வேண்டிக்கொண்டார். அவரது வேண்டுதலுக்குச் செவிசாய்ப்போமாக!

—அ. யே. தாசன்,

# இந்திய கம்யூனிஸ்த கட்சியில் கடும் தளர்ச்சி

சீன ஆக்ரமிப்பை ஒட்டி இந்திய கம்யூனிஸ்டுகளிடையே கருத்து வேறுபாடு தோன்றிக் கடந்த இரு வருடங்களாக வளர்ந்து வருகின்றது; அதனால், கட்சியில் கடும்பிளவு ஏற்பட்டு நாளுக்குநாள் பெரிதாகிவருகின்றது. சென்ற ஆண்டின் இறுதியில் மாஸ்கோ மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய கம்யூனிஸ்டு பிரதிநிதிகள் இதை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தேக்க மடைந்து பிணனிடைவதற்கு சீனுதான் காரணம் என்று அறிவித்துளளனர். ஆம், அக்கட்சியின் வளர்ச்சி தடைபட்டுள்ளது. அதன் விளைவாகப் புது அங்கத்தினர்களைத் திரட்டும் அலுவல்தடைப்பட்டுசோம்பி நிற்கின்றது. ஏற்கெனவே இருக்கும் உறுப்பினர்களும் விலகி வருகின்றனர். இதுவரை மொத்தம் 40,000 அங்கத்தினர்கள் விலகியுள்ளனர்.

பாமர மக்களின் ஆதரவையும், படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாது திண்டாடிய மேதைகளின் ஒத்துழைப்பையும் அமோகமாகப்பெற்றுக் கட்சிப்பலம் பெற்றிருந்த கேரளாவில் மட்டும் 20,000 உறுப்பினர் குறைந்துள்ளனர். கேரளாவுக்கு அடுத்தபடியாக வங்காளத்திலும் கம்யூனிஸ்டு கட்சிக்குப் பெரும் பிடியிருந்தது. அங்கும் கம்யூனிஸ்ட்டு கட்சியின் கெடுபிடி தளர்ந்துளளது. 4,000க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அக்கட்சியை விட்டொழித்திருக்கின்றனர். உத்தர பிரதேசம் போன்ற இதர மாநிலங்களிலும் இவ்வாறே கட்சி வளர்ச்சிதேங்கி நின்று குன்ற ஆரம்பித்துவிட்டது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna on Thursday February 23-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org